www.tamilarangam.net


# களத்தில்

இந்த நூற்றாண்டின்
ஒரு இணையற்ற
தலைவன்
வழிகாட்டுகின்றான்.
இன்னும் என்ன
தயக்கம்.

திருவள்ளுவர் ஆண்டு 2028 (16.07. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (139) அன்பளிப்பு: 60 p


# விடுதலைப் புலிகள் நடவடிக்கை
## சிறிலங்காப் படையின் விநியோகப் பாதை தடைப்பட்டது

தாண்டிக்குளம், பெரியமடு முகாம் தாக்குதல்களை அடுத்து சிறிலங்கா படையினர்க்கான விநியோக வழிகளை அடைக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வகையில் சிறிலங்கா அரசினால் தனது விநியோகத் தேவைகளுக்கென வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்த வடகொரிய சரக்குக் கப்பல் 37 வடகொரிய கப்பல் ஊழியர்களுடன் தமிழீழக் கடற்பரப்பில் வைத்து கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தென்பட்ட மேற்படி கப்பலை வழிமறித்த கடற்புலிகள் கப்பலை நிறுத்துமாறு பணித்ததாகவும் அதனை பொருட்படுத்தாது கப்பல் பயணத்தை தொடர முற்பட்டபொழுது கடற்புலிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு கப்பலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலின்போது இறந்த வடகொரிய கப்பல் சிப்பந்தியின் உடல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அதன் உள்ளூர்ப் பிரதிநிதி மூலம் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனால், மாங்குளத்தில் வைத்து புதன்கிழமை 9ஆம் திகதி மதியம் 12.30 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது.

ஏனைய 37 வடகொரிய சிப்பந்திகளும் தமது பாதுகாப்பில் உள்ளனர் என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் உறுதிசெய்துள்ளது.

தொடர்ச்சி 2ம் பக்கம்...

### முல்லைத்தள வெற்றியின் ஓராண்டு நினைவாக.....



அழகுபூத்த எமது மண்ணை அழிக்க நினைத்தவா
அகதியாக்கி தெருவினோரம் மழையில் நனைத்தவா
அமைதியாக உறங்கும்நேரம் உனக்கு இனியில்லை
அன்னைதேசம் விடியும்வரையும் எமக்கும் அது இல்லை !

## சிறிலங்கா அரசு இரக்கமற்றது
## தமிழர்கள் சண்டையிடுவதற்கு போதிய காரணமுண்டு
### - வடகொரிய மாலுமி பேட்டி

தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா அரசின் விநியோகக் கப்பலாக வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்த வடகொரியக் கப்பல் கைப்பற்றப்பட்டது. இக்கப்பலின் மாலுமி அளித்த பேட்டியில் "வன்னி மக்களின் பாதிப்புக்களின் தன்மை கண்டு ஆச்சரியப்படுகிறேன். வீடற்றவர்களாக போக்குவரத்து, மருத்துவ வசதி அற்றவர்களாக பட்டினி நிலைக்கு உள்ளாகித் தவிக்கும் மக்களைக் கண்டு சிறிலங்கா அரசின் இரக்கமற்ற தன்மையைப் புரிந்து கொள்கிறேன். இப்பொழுது தமிழர்கள் சண்டையிடப் போதிய காரணங்கள் உள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது. இற்றவரை சிறிலங்காவில் ஒரே ஒரு இனம் மட்டுமே உள்ளதென்றே நம்பினேன். ஆனால், இப்பொழுது இங்கு இரு இனங்கள் உண்டு எனத் தெளிவாக விளங்குகின்றது. நிச்சயமாக சிறிலங்கா ஓரவஞ்சனையாக ஓரினத்திற்கு மட்டுமே அரசாகச் செயற்பட்டு வருகின்றது. நான் தமிழ் மக்கள் நல்வாழ்வு பெற வாழ்த்துகிறேன். தமிழர்கள் தமது சொந்த தேசத்தை மீட்டு சொந்த அரசை அமைப்பார்கள் என்பது உறுதியாகத் தெரிகின்றது." எனக் கூறியுள்ளார். ✷

## சின்னவத்தை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது

மட்டக்களப்பில் சின்னவத்தை பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது. இத்தாக்குதலுக்குப் புறப்பட்டுச் சென்ற விடுதலைப்புலிகளை இடைநிறுத்த முயன்ற சிறிலங்கா அதிரடிப்படையினருடன் நேரடி மோதல் நடைபெற்றுள்ளது. 13-07-97 ஞாயிறு அதிகாலை நடைபெற்ற இம்மோதலில் அதிரடிப்படையினருக்கு ஏற்பட்ட இழப்பு என்னவெனத் தெரியாத போதிலும் அதிரடிப் படையினரை விடுதலைப்புலிகள் அடித்து விரட்டி விட்டு தமது இலக்கான சின்னவத்தை பொலிஸ் நிலையம் நோக்கி முன்னேறியுள்ளனர். அதிரடிப் படையினருடனான இவ் இடைவெளித் தாக்குதலில் கப்டன் குளக்கோட்டன், லெப். ஜெயராம், 2ம். லெப். ஜெயசோதி ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

சின்னவத்தை பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் இரு பொலிஸ்காரர் கொல்லப்பட்டனர், ஏனையோர் காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு ஓடித்தப்பித்துக்கொண்டனர். பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## மட்டக்களப்பில் 90,000 வீடுகள் அழிப்பு

கடந்த சில ஆண்டுகளில் 90,000 தமிழ்க் குடியிருப்புக்கள் சிறிலங்காப் படைகளினால் அழிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்குச் சொந்தக்காரரான சுமார் 70,000 பேருக்கு எதுவித உதவிகளுமின்றி தவிக்கின்றனர்.

சமீப காலங்களில் 620 பொதுமக்கள் மட்டக்களப்பில் உயிரிழந்தும் 300 பேர் காயமுற்றும் 18,000 பேர் தொழிலிழந்தும் துன்புறுவதாகவும் இவர்களுக்கு அரச நிவாரணப்பணம் எதுவுமே வழங்கப்படுவதில்லை எனவும் செய்திகள் கூறுகின்றன.

முன்னர் வங்கிகள், வீடுகளைக் கொடுத்துவந்த சந்திரிகா அரசு நிவாரணங்களை தடுத்து நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது. திறந்த கதவுகளுடன் உள்ள வீடுகளிற்குள் புகும் இராணுவத்தினர் அடையாள அட்டை

தொடர்ச்சி 2ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1150 தமிழர்களை கைது செய்தனர் 650 பேரை காணவில்லை

## - யாழ் அரசாங்க அதிபர் வெளியிட்ட திடுக்கிடும் தகவல்

யாழ் குடாநாடு சிறிலங்கா அரசாங்கத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் அதன் படைகளால் 1150 தமிழர்கள் கைதாக்கப்பட்டதாகவும் இவர்களில் 650 பேரை காணவில்லையெனத் தெரிய வந்துள்ளது எனவும் புதிய யாழ் அரசாங்க அதிபர் சண்முகநாதன் சிறிலங்கா அரசாங்கத்தைக் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் யாழ் குடாநாட்டில் ஐம்பது சதவீதமான குடியிருப்புகள் சந்திரிகா படையினரால் அழிக்கப்பட்டு விட்டதாகவும் இவற்றை புனரமைப்பதற்கான எதுவித அக்கறையும் சிறிலங்கா அரசாங்கத்தினால் காட்டப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் உலகையும் உள்ளூர் மக்களையும் ஏமாற்ற சந்திரிகா அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளின் தலைமையில் இராணுவ முகாம் வளாகங்களுள் இயங்கும் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்க யாழ் குடாநாட்டு மக்கள் மறுத்து வருவதாகத் தெரிகிறது. அனைத்துலக ரீதியாக எழுந்துவரும் எதிர்ப்பைத் தவிர்க்கும் கண்துடைப்பு முயற்சியாக சந்திரிகாவால் உருவாக்கப்பட்டுள்ள இவ் ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிப்பதில் எது வித பலனோ நீதியோ கிடைக்கப் போவதில்லை என பொதுமக்கள் கருத்துத் தெரிவித்துள்ளதாக குடாநாட்டிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ✷

# இலண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

✷ 1983 கறுப்பு யூலையினை நினைவுகூருமுகமாகவும்.....

✷ சந்திரிகா அரசின் வன்னி நோக்கிய தமிழின அழிப்பினை நோக்காகக் கொண்ட படையெடுப்பினை கண்டிக்குமுகமாகவும்

மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இலண்டனில் நடைபெறவுள்ளது.

காலம் : 26 யூலை 1997 , சனிக்கிழமை
நேரம் : பி.ப. 1.30 மணி
இடம் : TEMPLE PLACE, LONDON, WC2

தொடர்புகளிற்கு :
ஐக்கிய தமிழர் ஒன்றியம்
☎ 0171 - 403 4554 , 0956 314 - 370 , 0956 329 660

# விடுதலைப் புலிகள் நடவடிக்கை.......

இவர்கள் 37 பேரும் விரைவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சிறிலங்கா அரசினால், வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனியார் கப்பல்கள் தமது சேவையை நிறுத்தி உள்ளதாகவும் சிங்கள அரசாங்கமும், படைகளும் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை 7ஆம் திகதி முதல் தனியார் கப்பல்கள் இடைநிறுத்தி உள்ள விநியோகத்தை தொடரும்படி சிறிலங்கா அரசு பலவிதமான பேச்சுவார்த்தை முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை விநியோக வேலைகளை ஆரம்பிக்க தனியார் கம்பனிகள் வன்மையாக மறுத்து வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ✷

# மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

ALLMEND STADIUM
6000 LUZERN

03 - 08 - 97 ஞாயிறு
காலை 8.00 மணி

தமிழீழ விடுதலைப்புலிகள் (சுவிஸ் கிளை)

# மட்டக்களப்பில் 90,000 .....

கேட்டு இளம் பெண்களுடன் பாலியல் வன்முறைகளை மேற்கொள்வதாகவும் இதில் துறையடி முகாம் இராணுவத்தினர் முன்னணி வகிப்பதினால் கரவைக்குளி செட்டிக்குடியிருப்பு கிரான் பகுதியைச் சேர்ந்த பெண்கள் இரவு நேரங்களில் பாதுகாப்புத் தேடி பல மைல்கள் தூரம் செல்வதாகத் தெரிகிறது.

# யேர்மனியில் புனர்வாழ்வுக் கலைத் தென்றல் - 1997

## -தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 12வது ஆண்டுவிழா

## -மேஜர் சுரேந்தியின் பாடல் இசைத்தட்டு வெளியீடு

ஆண்டுதோறும் யேர்மனியின் பல நகரங்களில் 'புனர்வாழ்வுக் கலைத் தென்றல்' எனும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி ஆதரவு தேடும் தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளையினர், கடந்த மாதம் 1997ஆம் ஆண்டுக்கான முதல் நிகழ்ச்சியை 'மெசட' நகரில் நடாத்தினர். கொள்ப்ளிங்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு புனர்வாழ்வுக் கழகத்தின் பன்னிரண்டு ஆண்டுப் பணியினை நினைவுகூரும் விழாவாகவும் அமைந்தது. மண்டபம் நிறைந்த மக்களுடன் நிகழ்ச்சிகள் 5.30 மணியளவில் ஆரம்பமாகின.

மங்கள இசையை செல்வநாயகம் பாலமுரளி குழுவினர் இசைக்க, நாடக–நாட்டுக்கூத்துக் கலைஞரான இலியாஸ் பிள்ளை அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இவ் நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும் வகையில் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்களும் வருகை தந்திருந்தார். அவர், அவரது மாணவரும், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளைத் துணைப் பொறுப்பாளரும், இசையமைப்பாளருமான கண்ணனுடன் இணைந்து 'சுதந்திரத்தமிழிசை' இசை நிகழ்ச்சியை வழங்கினார். தமிழீழ விடுதலைப் பாடலான, 'என் இனமே என் சனமே' போன்ற பாடல்களைப் பாடிய இசை விற்பனரான சங்கீத பூஷணம் சுந்தரலிங்கம் அவர்கள், கம்பீரமான இசைக் கோலத்தை தனது மாணவனுடன் இணைந்து வழங்கியது சிறப்பாக அமைந்தது. பக்க வாத்தியங்களும் பாராட்டும்படி சிறப்பாக அமைந்தன. தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்கள், பொன். சுந்தரலிங்கம் அவர்களைப் பூச்செண்டு கொடுத்துக் கௌரவித்தார்.

'சிரிப்போம் சிந்திப்போம்' என்ற நகைச்சுவைக் கதம்பத்தை விகட விற்பனர் ஐசாக் இன்பராஜா அவர்கள், கேதீஸ் அவர்களுடன் இணைந்து வழங்கியிருந்தார். இந்த நிகழ்ச்சி மண்ணை நினைவூட்டும் விகடத்துளிகளைச் சிந்தி மக்களைச் சிந்திக்கத் தூண்டியது.

இந்த மேடையில், யேர்மனி நாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பொறுப்பையேற்று, திறம்பட செயற்பட்டு மாவீரரான மேஜர் சுரேந்திரகுமார் அவர்கள் எழுதிய பாடல்கள் கண்ணனால் (யேர்மனி) இசையமைக்கப்பட்டு இசைத்தட்டாக வெளியிடப்பட்டது. "மேஜர் சுரேந்தி அவர்கள் மிகவும் இக்கட்டான ஒருகாலகட்டத்தில் யேர்மனி நாட்டில் அமைப்பின் பணிகளைச் செய்து வந்தவர். தமிழ்க் கலைஞர்களை ஒருங்கிணைத்தவர். நித்திலா என்ற புனைபெயரில் விடுதலைக் கவிதைகளைப் புனைந்தவர். முதன்முதலில் தமிழீழம் இசைக்குழுவை யேர்மனியில் நிறுவியவர். அவரது பாடல்களின் உணர்வுக்கு மெருகூட்டி, கண்ணனின் இசையமைப்பில் இசைத்தட்டாக வெளியிடுவதில் பெருமையடைகின்றோம்" என விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் தனது வெளியீட்டுரையில் குறிப்பிட்டார். இசைத்தட்டை வெளியிட்டு வைத்த பொன். சுந்தரலிங்கம் அவர்கள் பேசுகையில், "கண்ணன் ஏழுவயதில் என்னிடம் படிக்க ஆரம்பித்த எனது மாணவன். ஒரு திறமைமிக்க இசைக் கலைஞர். பாடகர்களும் நன்றாகப் பாடியுள்ளனர். மண்மீட்பிற்காகப் பாடுபட்ட ஒரு மாவீரரின் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டை வெளியிடுவதில் மகிழ்ச்சியாக உள்ளது" என்றார். எலியாஸ்பிள்ளை அவர்கள் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

மெசட, பிர்லோன் தமிழாலய மாணவர்களது பேச்சு, நடனங்களையடுத்து, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளையின் நடன ஆசிரியைகளில் ஒருவரான செல்வி யாமினி சர்வானந்தனும் மாணவியரும் வழங்கிய நடனங்கள் இடம்பெற்றன. விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளையின் மற்றுமோர் நடன ஆசிரியையான செல்வி அற்புதராணி கந்தசாமி கவியமைத்து நடனமாடிய 'புதிய பிறப்பு' என்ற நாட்டியத்தை கண்ணன் இசையமைத்திருந்தார். கண்ணனின் இசையாக்கத்திலும், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளையின் நடன ஆசிரியையான திருமதி சாவித்திரி இமானுவேல் அவர்களின் நடன வடிவமைப்பிலும் உருவான 'விலங்கை உடைத்த விலங்கு' என்னும் இசை நடனம் இறுதி நிகழ்ச்சியாக இடம்பெற்றது. திரு. விஜயன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இரவு பதினொரு மணியளவில் நிகழ்ச்சிகள் முடிவுற்றன. நிகழ்ச்சிகளை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக அறிவிப்பாளர் எல். வலன்ரைன் தொகுத்து வழங்கினார். ✷

# சின்னவத்தை பொலிஸ் .......

## கடந்த வாரத்தில் ஆங்காங்கு பல தாக்குதல்கள்

வாழைச்சேனையில் 13.07.97 அதிகாலை விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு பொலிசார் கொல்லப்பட்டதாகவும், அவரின் ஆயுதம் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிகிறது.

நெடுங்கேணிப் பகுதியில் 07–07–97 இல் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட கடும் மோதலில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் காயமடைந்துள்ளனர். இதே தினம் சின்னப் பூவரசங்குளத்தில் நடைபெற்ற எதிர்பாராத மோதலில் 4 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர் எனவும் மேலும் பலர் படுகாயம் அடைந்ததாகவும் தெரியவருகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை விமல் (முத்தையா கந்தசாமி – புளியங்குளம்), வீரவேங்கை சித்திரன் (இரத்தினம் செந்தில் முருகன், யாழ்ப்பாணம்), வீரவேங்கை சத்திய சீலன் (தவநாயகம் விகர்ணன், யாழ்ப்பாணம்), வீரவேங்கை பண்புத்துரை (சிவனடியார் சிவானந்தம், யாழ்ப்பாணம்) ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

மன்னார் நாச்சிக்குடா பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ அணியை விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்ததாக ரொய்ரர் செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது.

பொலநறுவை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய துப்பாக்கிச்சூட்டில் இரு .இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்முறை அரசியலாக்கப்பட்டது

ஆனி 5ம் நாள் 1956ம் ஆண்டு எஸ்டபிள்யூ.ஆர்டி. பண்டாரநாயக்காவால் 'சிங்களம் மட்டும்' சட்டம் இலங்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதனை எதிர்த்துத் தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் 300 தொண்டர்கள் காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர். 'சிங்களம் மட்டும்' சட்டத்திற்கு ஆதரவாக ஊர்வலம் வந்த பிக்குகள் திடீரென சத்தியாக்கிரகிகள் மேல் பாய்ந்து அவர்களை அடித்து, உதைத்து சிலரை ஏரிக்குள் தூக்கி வீசவும் செய்தனர். சுற்றி நின்ற பொலிசார் மௌனமாக நின்றனர். சட்டத்தின் முன் தமிழனின் உயிர் செல்லாக் காசாக்கப்பட்டது. தெருவில் காணப்பட்ட தமிழர்களும் அடித்து துன்புறுத்தப்பட்டனர். தமிழர் கடைகள், வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. கல்லோயா, அம்பாறை பகுதிகளிலும் தமிழர்கள் பந்தாடப்பட்டனர். 150 தமிழ் மக்கள் இந்தக் கலவரத்தில் கொல்லப்பட்டனர். இந்த வன்முறை அரசியல் கலாச்சாரத்திற்கு சட்டப்பாதுகாப்பு கொடுத்ததன் மூலம் பண்டாரநாயக்கா அரசியல் வன்முறைக் கலாச்சாரத்தின் தந்தையாகத் திகழ்ந்தார். இந்த வன்முறையின் அறுவடையாக 1958ம் ஆண்டு வைகாசி 25ம் திகதி இனக்கலவரங்கள் அமைந்தன. கர்ப்பிணிப் பெண்களின் குடல்கள் கிழிக்கப்பட்டன. இந்தப் பயங்கரமான இனக்கலவரத்தைக் கண்ட கேம்பிரிச்சு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பி.எச். பார்மர், பிளவுண்ட தேசமாக இலங்கையை வர்ணித்தார். 'சிலோன் ஒப்சேவரின்' ஆசிரியராகவிருந்த டார்தி வித்தாட்சி, தமிழர்களும் சிங்களவர்களும் பிரிகின்ற நேரம் வந்துவிட்டது என வர்ணித்தார். ஆயினும் பண்டாரநாயக்கா அவசரகால சட்டத்தைப் பிரகடனப்படுத்தக் கூட 4 தினங்கள் எடுத்தார். இதன் மூலம் தமிழர் இன அழிப்பு செய்யப்படட வேண்டிய இனமாக, சிங்க்ள அரசுகள் கருதிய போக்கு உறுதியாகியது.

அடுத்து, கண்ணீரால் வாக்குப் பெற்று ஆட்சி அமைத்த சிறிமாவோ பண்டாரநாயக்கா 1961 இல் முதன் முதலில் இராணுவ நடவடிக்கையை தமிழர் தாயகத்தில் தொடக்கி வைத்து ஆயுத ஒடுக்குமுறை மூலம் சத்தியாக்கிரகிகளை அடித்து துன்புறுத்தி சித்திரவதை புரிவித்தார். இதே சிறிமாவோ 1972 இல் தன்னிச்சையான சிறிலங்கா பௌத்த சிங்கள குடியரசைப் பிரகடனப்படுத்தி அரசியற் திட்டங்களையும், ஜனநாயகத்தையும் பாராளுமன்ற ஆட்சி முறைமையையும் வன்முறைப் ப்டுத்தினார்.

இவர்களுக்கு தான் சற்றும் சளைத்தவர் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் 1978 இல் தமிழர்களுக்கான சட்ட பாதுகாப்பையும் நீதிமன்ற உரிமைகளையும் மறுத்தார். தமிழ் மக்களைப் பற்றிய அக்கறையே தமக்கு இல்லை எனப் பிரகடனம் செய்த ஜே.ஆர் தமிழ் மக்கள் மேல் போர்ப் பிரகடனம் செய்து அவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான இராணுவ காலவரையறைகளும் நிச்சயித்தார். இவற்றால் ஊக்கப்படுத்தப்பட்ட சிங்கள–பௌத்த பேரினவாதிகள் அரசாங்கத்தின் ஆதரவுடன் 1977 இல் கொழும்பு மலையகப் பகுதிகளில் இன அச்சுறுத்தல், இனத் துன்புறுத்தல்களை ஆரம்பித்து 1981 இல் யாழ்ப்பாண நகரை எரித்து, நூலகத்தை கொழுத்தி தமிழர் தாயகத்தினுள்ளேயே தமது இன அழிப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்தினர். இவைகளின் உச்சக்கட்டமான 1983 ஆடி இன ஒழிப்பு அமைந்தது. தமிழர்களின் உட்கட்டுமானங்களை அழித்தல், உயிர்களைக் குடித்தல், உடமைகளை நாசமாக்கல், தொழில் செய்யும் ஆற்றலைப் பறித்தல் என்ற நோக்குடனான சிங்கள அரசுகளின் இன அழிப்புத் திட்டங்கள் தமிழர் மீதான யுத்தமாகத் திணிக்கப்பட்டது. தமிழர் பிரச்சினைக்குச் சமாதான முறையில் தீர்வு காண்பேன் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த சந்திரிகா, தந்தை தாயை விட ஒரு படி மேல் போய் சர்வதே ச சட்டங்களையும் யுத்த முறைமைகளையும் கூடப் பொருட்படுத்தாது 1995 ஆடி 9 இல் நவாலித் தேவாலயத்தில் தஞ்சம் புகும்படி தானே பணித்து விட்டு தாமே மக்கள் மேல் குண்டு வீசி 142 பேரை கொன்று குவிக்கும் கைங்கரியத்ததைச் செய்தார். உண்மையை வெளிப்படுத்திய சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் எச்சரிக்கப்பட்டது. ஆக, தாய் தந்தையரின் வழியில் மகள் சந்திரிகா சர்வதேச மனித உரிமை சாசனத்தையும் சர்வதேச சட்டங்கள் போர் முறைகளையும் வன்முறைப்படுத்தி வருகின்றார்.

இதன் தொடராக இன்றும் வன்னிப்பகுதி உட்பட தமிழர் தாயகத்திற்கு, உணவை மருந்தை மறுத்தும் முற்றுகையைத் தொடுத்தும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களைப் பகிரங்கமாகச் செய்தும் வருகின்றார்.

இந்நிலையில், வன்முறைக் கலாச்சாரத்தை தந்தை பிரசவிக்க, தாயார் அதனை ஆயுதப்படையாக பிரயோகிக்க, வளர்த்தெடுக்க – மகள் சந்திரிகா அப்பட்டமான இன அழிப்பாக, உட்கட்டுமான அழிப்பாக, துணிந்து செயற்படுத்தி வருகின்றார். நாளெல்லாம் ஆடி 83 ஆக சந்திரிகாவால் மாற்றப்பட்டுள்ளது. இதுதான் சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்தத்தின் உள்நோக்கு. எனவே 83 ஆடி தந்த பாடத்தை மறவாது எமக்கான பாதுகாப்பை – நாமே உருவாக்கிய பாதுகாப்பை – நாமே வளர்க்க இயலுமான அத்தனையும் விடுதலைப் புலிகளுக்குச் செய்வோமாக. ✳

# போற்றுதலுக்கு உரியோர்

ஜூன் 5 கரும்புலிகள் நாள். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு பூகம்பத்தை நிகழ்த்திய நாள். 1987 இல் இன்றைய தினத்தில் தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கரும்புலித் தாக்குதல் எனும் ஒரு புதிய போர் வடிவம் அறிமுகம் செய்யப்பட்டது. அன்று தான் 'ஒப்பரேசன் லிபரேசன்' மூலம் வடமராட்சியை ஆக்கிரமித்த சிறிலங்கா இராணுவத்தினர் அமைந் திருந்த நெல்லியடி இராணுவமுகாமை கப்டன். மில்லர் தற்கொலைப் படையாளியாகச் சென்று தகர்த்தெ றிந்தான். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலித் தாக்குதல் எனும் போர் வடிவமானது ஒரு வரப்பிரசாதமாக இன்று மாறியுள்ளது. தரையிலும், கடலிலும் சிறீலங்கா ஆயுதப்படையையும் அரசையும் கதிகலங்கச் செய்யும் ஒரு ஆயுதமாக அது தோன்றியுள்ளது. இதன் வடிவமானது புதிய பரிமாணத்துடன் வலுமிக்கதாக உருவாகியுள்ள மையானது தமிழீழ விடுதலைப் போராட்டம் சில மைல்களை எண்ண வைப்பதாகவும் இருந்தது. சிறிலங்கா அரசுடனான இராணுவ அரசியல் சமத்துவம் செய்யவும் பயன்பட்டது. ஒட்டுமொத்தமாகவே விடுதலைப் புலிகள் அற்பணிப்புமிக்க போராளிகள் தான். இதனை சர்வதேச உலகமும் நன்கு அறியும். புலிகளின் அற்பணிப்பு, இலட்சியப்பற்று, உறுதி என்பவை குறித்து எதிர் தரப்பினரே பலதடவை வியந்துள்ளனர். இந்த நிலையிலும் கரும்புலிகள் இவர்களில் இருந்து வேறுபட்டவர்களாகவே இருந்தனர். ஏனெனில் இவர்களின் வீரமானது ஏனைய போராளிகளில் இருந்தும் வேறுபட்டதாக உள்ளது. கரும்புலி களின் செயல்களைச் சாதாரண மனிதர்கள் செய்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் தனிமனித அபிலாசைகள் இதற்கு இடமளிக்க மாட்டாது. அத்தோடு இதற்கு தனியாக வாழ்க்கை அபிலாசைகளை மட்டும் துறந்தால் போதாது. மரணத்தை மிஞ்சியதான ஆன்மீக பலமும், மனோதிடமும் தேவையாகும். அத்துடன் மிக நுட்பமான போரில் அறிவும் மிக முக்கியமானதாகும். இது மரணத்தை விட்டு தனது குறிக்கோளை அடைய முனையும் ஒரு செயல் வீரனின் வரலாறு ஆகும். அதாவது இந்தப் போராளி, மரணத்தின் நேரத்தையும், இடத்தையும் ஏற்கனவே அறிந்து கொள்கின்றான். ஆனால் அதனைப் பொருட்படுத்தாது தனது இலக்கினைச் சென்றடை வதையே குறியாகக் கொள்கிறான். இது மரணத்தை மிஞ்சும் செயல் என்பதில் எதுவித ஐயத்துக்கும் இடமில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கரும்புலிகள் புரிந்த சாதனைகள் மகத்தானவை. இவை சிறிலங்கா இராணுவ இயக்கத்தைப் பல தடவைகள் ஸ்தம்பிக்கச் செய்துள்ளன. இவை சிறிலங்கா அரசியல் வரலாற்றை

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

# பொருத்தமான வேளையில்

"விடுதலைப் புலிகள் உலகில் முதன்மை வாய்ந்த கெரில்லா அமைப்பாக உள்ளனர். நவீன சக்தியுடைய அமெரிக்க இராணு வத்தினாலும் புலிகளை வெல்ல முடியாது என்பது நிரந்தரமான உண்மை. இதனைப் புரிந்து கொண்டு அரசாங்கம் படைகளை வாபஸ் பெற வேண்டும். இல்லையேல் தாண்டிக் குளம், ஓமந்தைப் பகுதியில் சந்தித்த இழப்புக்களை விட அதிகமான இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும்" என நவசமசமாஜக் கட்சித்தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண எச்சரித்துள்ளார். கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ணாவின் எச்சரிக்கையில் அமெரிக்க இராணுவத் தினருடனான விடுதலைப்புலிகளின் ஒப்புவமை ஒருபுறம் இருக்க விடுதலைப் புலிகளுடனான போரில் சிறீலங்கா இராணுவம் வெல்ல முடியாது என்று அவர் கூறியுள்ளது பொருத்தமான உண்மையாகும். ஆனால் கலாநிதி கருணாரட்ண தற்பொழுது கூறித்தான் புரிந்து கொள்ள வேண்டியதல்ல இது. கடந்தகால வரலாறே இதனை விளங்கவைக்கப் போதுமானதாகும்.

ஒருபுறம் ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாது என்பதுடன், மறுபுறம் தேசிய இன விடுதலைப் போரில் விடுதலைப் புலிகள் மீது திணிக்கப்பட்ட இராணுவ அழுத்தங்கள் எவையும் புலிகளைத் தோற்கடிக்க உதவவில்லை என்பது கடந்தகால வரலாறு ஆகும். ஆனால் இதனைச் சந்திரிகா அரசாங்கம் புரிந்து கொண்டதாகவோ அன்றி விளங்கிக் கொண்டதாகவோ இல்லை. அவ்வாறு புரிந்துகொண்டிருந்தால் இராணுவ நடவடிக்கைகளை புலிகளுக்கு எதிராகத் தொடர்ந்திருக்கவோ தீவிர மாக்கியிருக்கவோ மாட்டாது. ஆனால் தற்பொழுது மீண்டும் ஒருமுறை சந்திரிகா அரசின் அணுகுமுறை தவறு என்பது அதற்கு உணர்த் தப்பட்டுள்ளது. தாண்டிக்குளத்திலும், பெரியமடுவிலும் புலிகள் நடத்திய தாக்குதல்கள், சந்திரிகா அரசின் கணக்குகள் யாவும் தப்பானவை என்பதைப் புரிய வைத்திருக்கும். இதனை ஜயசுக்குறு படை நடவடிக்கை இடை நிறுத்தப் பட்டுள்ளமைக்கு, எதிர்பார்த் ததைவிட பெரிய இழப்புக்களை இராணுவம் சந்தித்துள்ளதை ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளதன் மூலமும் சுட்டிக் காட்ட முடியும். அதாவது அரசாங்கம் எதிர்பார்த்தது போன்று புலிகள் இராணுவ ரீதியில் ஒடுக்கப்பட்ட சக்தியாக இல்லையென்றும் அவர்கள் மிகப் பலமான நிலையிலேயே உள்ளார்கள் என்பதும் தெரிய வருகின்றது. இந்த வேளையில் தான் கலாநிதி கருணாரட்ண மீண்டும் ஒரு தடவை அரசுக்கு இதை நினைவூட்டி உள்ளார். அதாவது இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் இராணுவம் பேரிழப்பைச் சந்திக்க வேண்டிவரும் எனக் கூறியுள்ளார். இதனை ஜனாதிபதி சந்திரிகாவோ அன்றிப்

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

www.tamilarangam.net



# 83 ஆடி இனஅழிப்பு : தமிழர்கள் என்பதற்காகவே அவர்கள் அழிக்கப்பட்டனர்

✳ தமிழ்த் தேசியத்தின் குரல்வளையை நசுக்குவதே அன்றும் இன்றும் என்றும் சிங்கள அரசின் நோக்கு

✳ இந்த நோக்கே இன அழிப்புப் போக்குகளாகின்றன.

✳ போரை தமிழர் மேல் திணிக்கிறது ✳ பேச்சுவார்த்தையை முறிக்கின்றது.

**1983** ஆடி இன அழிப்புச் சம்பவங்கள் தற்செயல் நிகழ்வுகள் அல்ல. காலனித்துவ விலகல் முதல் சிங்கள அரசுகள் திட்டமிட்டு வளர்த்து வந்த சட்டப் பாதுகாப்புடனான இனவெறியுடன் கூடிய இனவாத அரசியலின் சரித்திர அறுவடை.

## 150 வது ஆண்டுப் பரிசு

1833இல் பிரித்தானியர் தமிழ், சிங்கள அரசுகளை வலுக்கட்டாயமாக ஒருங்கிணைத்து ஐக்கிய இலங்கை என்ற ஒற்றையாட்சியை ஏற்படுத்தினர். அந்த இமாலயத் தவறு தந்த 150 ஆண்டுப் பரிசாக 1983இல் தமிழர் இனப்படுகொலை இடம்பெற்றது என்பது மிகையல்ல. இதனை ஏன் குறிப்பிடு கிறேன் என்றால், காலனித்துவம் உருவாக்கிய சிங்கள அரசுகள் தமிழர்களுக்கு அந்நிய அரசாக இருந்து வருவதே எல்லாப் பிரச்சினைகளினதும் ஊற்றாக உள்ளன என்பதை எடுத்து விளக்குவதற்கே.

## ஐ.நா. நிபுணரின் எச்சரிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு – உப ஆணைக்குழு குறித்து ஆய்வுகள் செய்துவரும் நிபுணரான லியோ கூப்பர் தான் 1982 ஆண்டளவிலேயே ஜெனிவாவில் உள்ள சிறிலங்கா தூதுவரை இனக்கலவரம் மூழ்வதற்குரிய சூழ்நிலைகள் அதிகரித்து வருவது குறித்து எச்சரித்ததாக கூறியுள்ளார். இந்த இனக்கலவரங்களின் பின்னணி 1833ஆம் ஆண்டின் பிரித்தானியரின் ஒருங்கிணைப்பு முடிவுதான் எனவும் அவர் கூறியுள்ளார். மேலும் உப ஆணைக்குழுவில், 83 ஆடி இனஅழிப்பின் பின் 10க்கு 8 என்ற வாக்கு வித்தியாசத்தில் சிறிலங்கா அரசிடம் இருந்து தகவல்களைக் கோரி அடுத்த கூட்டத்தில் ஆராய்வது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது எனக் கூறும் கூப்பர், ஐ . நா. சபை இக்கட்டத்தில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்காமல் விட்டமை துரதிருஸ்டவசமானது எனக் கவலை தெரிவித்துள்ளார். இதனால் சிங்கள இராணுவம் அதிகளவில் தமிழர்களைக் கொன்று குவிப்பது வளர்ச்சியுற்றதாகவும் நிலைமை கட்டுப்பாட்டுக்கு மேல் சென்றுவிட்டது எனவும் கவலை தெரிவித்துள்ளார்.

1983ஆம் ஆண்டில் சிறிலங்காவில் உள்ள

- பற்றிமாகரன் -

தமிழர்கள் குறித்து சிறுபான்மையினர் உரிமைகள் குழுவின் அறிக்கையில் வோல்டர் சுவட்ஸ் அவர்கள், தமிழர்களின் மனித உரிமைகள் – வாழ்வதற்கான உரிமை, சொத்து உரிமை, பேச்சுரிமை, காரணமின்றிக் கைது செய்யப்படுவதில் இருந்து விடுபடும் உரிமை போன்ற பல – சிறிலங்கா அரசினால் வன்முறைப் படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

ஒக்ஸ்போட் அறிஞரான வேிட் செல்போர்ன் "தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்பு, குடியுரிமை, அரசியல் பிரதிநிதித்துவம் போன்றவற்றுக்கு எதிரான பல குற்றச் செயல்களை சிறிலங்கா அரசு இழைத்து வருகிறது" என 1984இல் பகிரங்கமாக குற்றம் சுமத்தினார்.



இவ்வாறாக, பல சர்வதேச அறிஞர்களும், நிபுணர்களும் 1983 இன அழிப்பையும் அதன் விளைவுகளையும் கடுமையாகக் கண்டித்தனர்.

## தமிழ்த் தேசியம் எதிரியாகக் காட்டப்பட்டது

சிங்கள அரசுகள், காலனித்துவ விலகலின் பின் தமிழர்களின் தமிழ்த் தேசியத்தை சிங்களவர்களுக்கு எதிரான துரோகத்தனமாகக் காட்டுவதில் பெரும் அக்கறை காட்டின. இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தைக் குறைப்பதன் மூலம் 'சட்டவாக்கத்தில் அவர்கள் தாக்கத்தை ஏற்படுத்துவதைத் தடுத்தல்' என்பது சிங்கள அரசுகளின் தந்திரோபாயமாக காணப்படுகிறது. 1977, 1981, 1983களில் தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் இனக்கலவரங்களால் அச்சத்துக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டனர். இந்த நேரங்களில் எல்லாம் தமிழ் மக்களுக்கு ஆதரவான வார்த்தைகளைக் கூடக் கூறாத சிங்களப் பெரும்பான்மை அரசுகள், 1958 இனக்கலவரத்தை தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளின் பிரதிபலிப்பு எனவும் 1983 இனக்கலவரத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளின் விளைவு எனவும் வர்ணித்து தமிழீழத் தேசியத்தை சிங்களவர்களின் எதிரியாக காட்ட முனைந்தனரே தவிர பொறுப்பான ஜனநாயக அரசு என்ற வகையில் இத்தகைய கொடுமைகள் நடைபெறாமல் தடுப்பதற்கான எச்சரிப்புக்களையோ அல்லது சட்டப் பாதுகாப்புகளையோ நீதி அமுலாக்கங்களையோ செய்ததில்லை. 1983 இனக்கலவரத்தில் இதனைத் தெளிவாகவும் ஆழமாகவும் காணும் ஆய்வாளர்கள் 1983 இனக்கலவரமாக காணாது இன அழிப்பாகவே பிரகடனம் செய்கின்றனர்.

## 1983 இன அழிப்பின் சுருக்கமான விபரம்

லியோ கூப்பரின் தகவலின்படி, 2,000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இனஅழிப்பில் படுகொலை செய்யப்பட்டனர் எனவும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் கட்டாய இடப்பெயர்வுக்கு ஆளாகினர் எனவும் கூறுகிறார். வெலிக்கடைச் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த 53 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதும், எவ்வளவு தூரத்துக்கு சிங்கள இனவாத அரசு கேவலமான செயல்களின் ஊற்றாக விளங்கியது என்பதன் சான்றுகளாக உள்ளன. தமிழ் மக்களுக்குத் தீங்குகள் விளைவிக்கப்பட்டு அவர்கள் சொல்லொணா வேதனைகளை அனுபவிக்கும் பொழுதெல்லாம் அது சிங்கள தேசியத்தின் வெற்றியாக வர்ணிக்கப்பட்டதே தவிர, மனித வதை என்று கூட பொருட்படுத்தப்படவில்லை. இதனால் தமிழ் மக்கள் தமது பாதுகாப்புக்கான வாழ்வுக்கான போராட்டமாக தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடாத்த வேண்டிய கட்டாயத் தேவை தொடர்கிறது.

## தொடர் கதை

தமிழர்களின் பொருளாதார வளத்தைக் குறிவைத்து நடாத்தும் சிங்களத்தின் வன்முறைச் செயல் 83 உடன் முடியவில்லை. 1983 முதல் 1987 ஆடிக்கிடைப்பட்ட காலத்தில் தமிழர் தாயகத்தில் 69400 வீடுகள் அழிக்கப்பட்டன. 30,000 வீடுகள் சேதமாக்கப்பட்டன. 11,300 வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டன. இதில் 8000 முற்றாக நிர்மூலமாக்கப்பட்டன. மொத்தமாக 23.5 பில்லியன் ரூபாக்கள் சேதம் விளைவிக்கப்பட்டதாக ஜோன் எம். ரிச்சர்ட்சனும், எஸ்.டபிள்யூ.ஆர்.டி.ஏ. சமரசிங்கவும் குறிப்பிடுகின்றனர்.

சுருக்கமாகக் கூறினால், தமிழர்களின் பொருளாதாரத்தை நசுக்குவதும், அவர்களை இன அழிப்புக்கு உள்ளாக்குவது, அச்சுறுத்தல் மூலம் அவர்களைப் பணிய வைக்க முயற்சிப்பதுமே சிங்கள அரசுகளின் தந்திரோபாயமாக இருந்து வருகிறது.

## சந்திரிகாவின் இன்றைய முயற்சிகள்

'சமாதானத்திற்கான போர்' என்ற பெயரிலும், பாதை திறப்புக்கான முயற்சி என்ற பெயரிலும் பலவிதமான புனை பெயர்களுடன் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா இனஅழிப்பு முயற்சிகளையும், பொருளாதார அழிவுகளையும் தமிழர் மேல் தொடர்ந்து அமுலாக்கிக் கொண்டிருக்கின்றார். இவை எல்லாமே தமிழ்த் தேசியத்தை நசுக்க வேண்டுமென்பதை மையமாகக் கொண்டு செயற்படுகிறதே தவிர தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இடம்பெறவில்லை. இந்த உண்மையை, பேச்சுவார்த்தை முயற்சிகளில் சிறிலங்கா அரசின் சார்பில் இடம்பெற்ற பேராசிரியர் ஜெயதேவா "பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு ஏற்பட்டுவரும் இக்கட்டான நிலைமை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து வரவில்லை. தமிழீழத் தேசியவாதத்தின் அரசியல் தன்மையும் இராணுவ வலிமையும் பாதுகாப்பு முயற்சிகளுமே. (இவைகளையே சிறிலங்கா அரசு முட்டுக்கட்டையாக கருதுகின்றது) இந்தத் தமிழ் தேசியவாதத்தையே விடுதலைப் புலிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்த உண்மைகள் ஏற்கப்படும் அல்லது இதற்கான சூழ்நிலைகள் மாற்றியமைக்கப்படும் வரை தெற்கிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டையும் பேச்சுக்களும் பல தடவைகள் நடைபெறும்" எனக் கூறியுள்ளார்.

(The biggest dilemma of a peace initiative of the state emanates not from the LTTE per se. But from the difficulty in coming terms with the political and military / defence gains of Tamil nationalism, which the LTTE represents. Tragically it may take many many more round of peace and war between the LTTE and the south either to accept this reality or to change its parameters.)

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நவாலி இனப்படுகொலை; நெஞ்சம் கொதிக்கிறது

**- அழுவது அல்ல எழுந்து நிற்பதே உண்மை வீராஞ்சலி -**

எங்கள் குழந்தைகளை கொன்றவரை
விரட்டுவோம்.
எங்கள் அகதிகளை அழித்தவரைத்
துரத்துவோம்.
எம்மை காக்கும் புலிவீரர் கை
பலப்படுத்துவோம்.
நாளை பூக்கும் சுதந்திரம்
விரைவாக்குவோம்.
இன்றே நம்நாட்டு பணிமனைகள்
நாடிச் செல்வோம்.
நன்றே அவருடன் இணைந்து தேசப்
பணியாற்றுவோம்.

''இனஅழிப்பு எனப் பொதுவாகக் கூறும்பொழுது ஒருதேச இனத்தை உடனடியாக அழிப்பது என்பது பொருளல்ல. ஒரு தேச இனத்தினை முற்றாக அழிப்பதை விட அந்த இனத்தின் வாழ்வுக்குத் தேவையான அடிப்படைகளை திட்டமிட்ட வகையில் அழிப்பதும் அடங்கும். அத்தகைய திட்டங்கள், குறிப்பிட்ட இனத்தின் அரசியல் சமூக நிறுவனங்களின் ஒற்றுமையான இயக்கத்தை குலைப்பது, கலாசாரம், மொழி, தேசிய உணர்வு, மதம், பொருளாதார முயற்சிகள், தனிப்பட்ட பாதுகாப்பு, சுதந்திரம், உடல்நலன் என்பவற்றை அழிப்பது எனப் பலவகையில் அமையும். இனஅழிப்பு முழு இனத்தையும் நோக்கிச் செயற்பட்டாலும் அதனுடைய செயற்பாடுகள் அந்த இனத்தைச் சேர்ந்த தனிப்பட்ட ஒவ்வொருவரையுமே பாதிப்பனவாக அமையும். அவர்களது தனிப்பட்ட தன்மை காரணமாக அல்லாது அவர்கள் சார்ந்திருக்கும் இனம் காரணமாக அவர்கள் பாதிப்புறுவர்" என முதன்முதலில் இனஅழிப்பு என்ற சொல்லை பிரசவித்து விளக்கிய லெம்கின் அவர்கள் (Mr. Lemkin) கூறுகின்றார்.

சிறிலங்காவின் பௌத்த – சிங்கள பேரினவாத அரசு, லெம்கின் கூறிய 'இனஅழிப்பு' என்ற விளக்கத்தின் நடைமுறை உதாரணமாக உலக அரங்கில் காணப்படுகின்றது. 'சமாதானத்திற்கான போர்' என்ற பெயரில்

**- யோசப் -**

தமிழர்களின் பாரம்பரிய தாயக மையமான யாழ்ப்பாண பிரதேசத்தை நோக்கிய முதலாவது படையெடுப்பைத் தொடங்கிய சந்திரிகாவின் சிங்கள ஆக்கிரமிப்பு அரசு, மக்களை கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடையும்படி அரச கட்டுப்பாட்டு வானொலியிலும், விமானத்தில் இருந்து பிரசுரங்களை வீசியதன் மூலமும் மக்களைப் பணித்தது.

சிங்களப் படையினர் வருகின்றனர் என்பதை அறிந்த மக்கள் மரண பயத்துடன் பெரும் அவலப்பட்டு பல பகுதிகளுக்கும் சிதறிச் சென்றனர். இதில் ஒரு பகுதியினர் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தினை நோக்கி உயிர்காக்கும் நோக்குடன் முண்டியடித்துக் கொண்டு சென்று அங்கு தஞ்சமடைந்திருந்தினர். தங்களை ஒட்டுமொத்தமாக இலகுவாக வேட்டையாடுவதற்கே சிறிலங்கா அரசு இத்தகைய கபட அறிவிப்பைச் செய்கிறது என்பதனை அப்போது அவர்கள் எதிர்பார்க்கவில்லைத்தான்.

நவாலி தேவாலயம் மிக உயரமான கோபுரத்தைக் கொண்ட, மேலிருந்து தேவாலயம் என இலகுவில் அடையாளம் காணக்கூடிய கட்டிட அமைப்பாக உள்ளதால், தவறுதலாக வான் தாக்குதலுக்கு உட்படும் என்ற பேச்சிற்கே இடமில்லை.

இந்த வகையில் சிறிலங்காப் படைகள் அப்பட்டமான இனஅழிப்புக்கு திட்டமிட்டன. ஆடி 9ஆம் திகதி 1995 மாலை 4.30 மணிக்கு ஆர்ஜென்ரினாவினால் தயாரிக்கப்பட்ட புக்காரா சண்டை விமானம் சென். பீற்றர்ஸ் தேவாலயத்தினைச் சுற்றிக் குண்டுகளை வீசியது.

பிஞ்சுக் குழந்தைகள் – பள்ளிச் சிறுவர்கள் – கர்ப்பிணித் தாய்மார் – வயோதிபர்கள் – நோயாளிகள் – இளைஞர்கள் எனப் பலர் குண்டு வீச்சுக்கு இரையாகினர். தஞ்சம் தேடி வந்த மக்கள் வெள்ளம், இரத்த வெள்ளத்தில் மிதந்தனர். அவ்விடத்திலேயே 141 உயிர்கள் அநியாயமாகப் பலி கொள்ளப்பட்டன. காயப்பட்டவர்களை அந்தக் கடுஞ் சண்டைச் சூழலிலும், உழவு இயந்திரங்களில் யாழ். மருத்துவமனை நோக்கி எடுத்துச் சென்றனர். பலருக்கு உடல் உறுப்புக்களை அகற்றியே அவர்களை உயிர் காப்பாற்ற வேண்டிய நிலையில் மருத்துவர்கள் தவித்தனர்.

இந்த மனிதப் படுகொலையை – இனஅழிப்பை உலகுக்கு அம்பலப்படுத்திய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை கடுமையாகக் கண்டிப்பதில்தான் சந்திரிகா அரசு அக்கறை



காட்டியதே தவிர, இம் மக்களுக்காக ஒரு அனுதாப வார்த்தை கூறவேண்டும் எனும் எண்ணம் கூட இல்லாமல் தனது இனவெறியை எண்ணி மனமகிழ்ந்து எக்காளமிட்டது. சிறிலங்காவின் ஆட்சிப் பதவிக்கு வந்த சகல சிங்கள அரசுகளும் இந்தப் போக்கையே கொண்டிருந்தன. தமிழர்களைத் துன்புறுத்துவதில் சிங்களவர்கள் திருப்தி கண்டால் அதற்கு உற்சாகம் அளிப்பதையே இவைகள் கடமையாகக் கொண்டன. சிறிலங்காவின் பௌத்த – சிங்களப் பேரினவாத அரசு, தமிழர்களுக்கு அந்நிய அரசு என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று தேவை?

கபொட் (CAFOD) சர்வதேச நிறுவனத்தின் லண்டன் பிரதிநிதி, இந்த நவாலி தேவாலய இனக்கொலை குறித்து அன்றைய பிரித்தானிய வெளிவிவகார செயலர் திரு. மல்கம் றிப்கிண்ட் அவர்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் "சிறிலங்கா அரசு சர்வதேச போர் விதிகளை மீறி செயலாற்றுகிறது" எனத் தெளிவாகக் குறிப்பிட்டார். ஆக, நவாலித் தேவாலயம், நாகர் கோவில் பாடசாலைப் படுகொலைகள் சிறிலங்கா அரசினது இனஅழிப்பினதும் சர்வதேச போர்க் குற்றச் செயல்களினதும் சரித்திரச் சான்றாக உள்ளது.

இதனை சர்வதேசத்திற்கு பரப்புரை செய்து, சந்தை நலன்களுக்காகவும், ஆயுத விற்பனை இலாபங்களுக்காகவும், கேந்திர நோக்குகளுக்காகவும் தமிழர்களுக்கு மீண்டும் மீண்டும் இழைக்கப்படும் சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரான இன அழிப்புகளுக்கு உரிய கண்டனம் தெரிவிக்காது – தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளாது – சாட்டுப்போக்குச் சொல்லும் சர்வதேச அரசுகளையும் அமைப்புகளையும் தட்டிக் கேட்பது நம் கடமை. எம் மக்களின் நியாயத்துக்கு உதவும்படி, அமைதி – மனித நேயத்தில் அக்கறை கொண்ட உள்ளங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும். ✷

**இதனை சர்வதேசத்திற்கு பரப்புரை செய்து, சந்தை நலன்களுக்காகவும், ஆயுத விற்பனை இலாபங்களுக்காகவும், கேந்திர நோக்குகளுக்காகவும் தமிழர்களுக்கு மீண்டும் மீண்டும் இழைக்கப்படும் சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரான இன அழிப்புகளுக்கு உரிய கண்டனம் தெரிவிக்காது - தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளாது - சாட்டுப்போக்குச் சொல்லும் சர்வதேச அரசுகளையும் அமைப்புகளையும் தட்டிக் கேட்பது நம் கடமை. எம் மக்களின் நியாயத்துக்கு உதவும்படி, அமைதி - மனித நேயத்தில் அக்கறை கொண்ட உள்ளங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.**

## 83 ஆடி இன அழிப்பு......

பேராசிரியர் ஜெயதேவாவின் கூற்று, தமிழ்த் தேசியவாதத்தைத் தான் சந்திரிகா அரசு எதிரியாக கருதுகிறது. இதனால் தமிழர்களை அழித்தொழித்தாவது தனது அரசியல் திணிப்புகளை மேற்கொள்ளத் துடிக்கிறது என்பதைத் தெளிவாக்குகிறது. 1983 முதல் இன்றுவரை இதுதான் (என்றும்) பேரினவாத சிங்கள அரசுகளின் நோக்கும் போக்குமாக உள்ளன.

இதனை மாற்ற வேண்டுமானால் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்து அதனை வெற்றி பெற வைப்பது ஒன்றே வழி. இதனாலேயே தமிழர்களின் இன அழிவும் பொருளாதார நாசமாக்கலும் தடுக்கப்படலாம். தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் அமைப்பு தமிழ் மக்களின் பாதுகாப்பைப் பேணுவதினாலேயே இலங்கைத் தீவில் தமிழர்கள் பூரணமான இனஅழிவுக்கு ஆளாக்கப்படாமல் தடுக்கப்பட்டு வருகின்றனர்.

**இவற்றை சர்வதேசத்திற்கும் பரப்புரை செய்து தமிழர்களின் இன அழிவை - பொருளாதார நாசமாக்கலைத் தடுக்கும் பொறுப்பு புலம் பெயர் தமிழருடையது.** ✷

www.tamilarangam.net



# நீதிபதி அவர்களே! "சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம்" என்ற வார்த்தைகள் என்னுடையதல்ல, அது றீகன் நிர்வாகத்தின் சொற்பிரயோகம்

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச் சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை மார்ச் 19ஆம் திகதி ஆரம்பமாகியது. கனடா இணைப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் இவ்வழக்கில் சுரேஷ் அவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:

1) திரு. சுரேஷ் அவர்கள் பயங்கரவாத இயக்கம் ஒன்றில் உறுப்பினராக இருக்கிறார் என நியாயமான முறையில் நம்பப்படுகிறது. அந்த இயக்கம் பயங்கரவாதத்தில் ஈடுபடக்கூடும் என நியாயமான முறையில் நம்பப்படுகிறது.

2) திரு. சுரேஷ் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார் என நம்புவதற்கு நியாயமான அடிப்படைகள் இருக்கின்றன.

3) திரு. சுரேஷ் பயங்கரவாத இயக்கம் ஒன்றில் உறுப்பினராக இருக்கிறார் அல்லது இருந்தார் என நம்புவதற்கு நியாயமான அடிப்படைகள் இருக்கின்றன.

இங்கே குறிப்பிடப்படும் பயங்கரவாத இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளாகும்.

இதுவரை நடந்த விசாரணையில் கனேடிய அரசு பின்வரும் குற்றச்சாட்டுகளை வற்புறுத்துவதில்லை எனக் கைவிட்டுள்ளது.

திரு. சுரேஷ் அவர்கள்,

அ) கடும் குற்றச்சாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

ஆ) சிறிலங்காவில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இ) கனடாவில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் அல்லது இராணுவ உபயோகத்துக்கான பொருட்கள் கொள்வனவு செய்தார்.

இவ்வழக்கு விசாரணையை நீதிபதி Teitelbaum நடாத்துகிறார். வழக்கு விசாரணை செப்டெம்பர் 17ஆம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. இதுவரை திரு. சுரேஷ் சார்பாக முப்பதிற்கும் மேற்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் அவரின் வழக்கறிஞர்கள் Ms.Barbara Jackman , Lorne Waldman ஆகியோரால் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.

**திரு. வயலன்ட் கோட்:** கனம் நீதிபதி அவர்களே! நான் நினைத்தேன் நாங்கள் நேரே பிரச்சனையின் மையப் பகுதிக்கே போவதாக——

**நீதியரசர்:** ஆனால், சாட்சி என்ன காரணங்களுக்காகவோ........, அவருக்கு காரணங்கள் இருக்கின்றன, நான் அந்தச் சொல்லைப் பாவிக்க மாட்டேன். காரணம் அந்தச் சொல்லின் கருத்து என்ன என்பது எனக்குத் தெரியாது என்கிறார். நல்லது, மன்னிக்கவும் அவர் அப்படிச் சொல்லவில்லை. அவர் சொன்னார், பயங்கரவாதத்துக்குச் சர்வதேச வரைவிலக்கணம் ஒன்று இருப்பதை நான் பார்க்கவில்லை; பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் இருக்கிறதா இல்லையா என்பதை அவர் சொன்னதாக இந்த நிமிடம் வரை நான் கேட்கவில்லை.

**திரு. வயலன்ட் கோட்:** Canary Wharf க்கு குண்டு வைத்தது, இலண்டனில் வதியும் பொதுமக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியது என்பதையாவது ஒத்துக் கொள்வீர்களா?

**பதில்:** நிச்சயமாக.

**நீதியரசர்:** நான் நினைக்கிறேன், அவர் ஏற்கனவே ஆம் என்று சொல்லிவிட்டார்.

**சாட்சி:** நிச்சயமாக.

**நீதியரசர்:** நான் நினைக்கிறேன், ஐயா பிழையென்றால் என்னைத் திருத்திக் கொள்ளவும். காயப்படுத்தல் அல்லது குண்டு வைத்தல்—— நான் காயப்படுத்தல் என்ற வார்த்தையை உபயோகிக்க விரும்புகிறேன். ஐயா நீங்கள் பொது மக்களுக்குக் குண்டு வைத்தல் என்ற வார்த்தையை உபயோகித்தீர்கள். அப்பாவி மக்கள் மத்தியில் பயம் ஏற்படுவதாகவும் என்ற வார்த்தையையும் உபயோகித்தீர்கள். நான் நினைக்கிறேன் அப்படித்தான் நீங்கள் சொன்னீர்கள். அது சரியா?

**சாட்சி:** குண்டு வைத்தல் பொதுமக்கள் மத்தியில் நிச்சயமாக பயத்தை ஏற்படுத்தும். அங்கு வதியும் அப்பாவி மக்களிடையே பயத்தை நிச்சயமாக ஏற்படுத்தும்.

**நீதியரசர்:** வேறு ஏதாவது கேள்விகள் இருந்தால் தயவு செய்து தொடரவும்.

**திரு. வயலன்ட்கோட்:** இல்லை, நன்றி.

**நீதியரசர்:** நன்றி. செல்வி யக்மன் இவற்றிற்குப் பதில் சொல்ல விரும்புகிறீர்களா? நாளை தொடர வேண்டுமென்றால் நாளை தொடரலாம்.

**சாட்சி:** நாளை எனக்கு வகுப்புக்கள் இருக்கின்றன. எனவே நாளை நான் விமானத்தைப் பிடிக்க வேண்டும்.

**நீதியரசர்:** சரி ஐயா, நாளை நாங்கள் முடிக்காவிட்டால் நீங்கள் விமானத்தைப் பிடிக்க முடியாது.

**செல்வி யக்மன்:** ஒரே ஒரு கேள்வி மட்டும் நான் கேட்க விரும்புகிறேன்.

**செல்வி யக்மனால் மீள் விசாரணை செய்யப்படுகிறது:**

**கேள்வி:** பேரூந்து நிலையத்தை இலக்கு வைத்து குண்டு வைப்பது பற்றி எனது நண்பரின் கேள்விகளுக்கு மட்டும் மறுமொழி சொல்வதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். அவர் கேட்டுக்கொண்டே இருந்தார், அதனைப் பயங்கரவாதம் எனக் கணிக்கலாமா என்று. அதற்கு உங்கள் மறுமொழி ஒப்பந்தம் ஒன்றின் கீழ் அது 'போர்க்குற்றம்' என்று சொன்னீர்கள். நான் அனுமானிக்கிறேன், நீங்கள் தேசிய விடுதலை இயக்கங்களைக் குறிப்பிடுகிறீர்கள் என்று?

**பதில்:** ஆம். ஒரு தேசிய விடுதலை இயக்கம் பொதுமக்கள் பேரூந்து மீது குண்டுத் தாக்குதல் நடத்தினால், அது நிச்சயமாக போர்க்குற்றம் ஆகக் கணிக்கப்படும். அப்படியான கடுமையான போர்க்குற்றத்திற்கு வழக்குத் தொடர வேண்டும். நான் ஒன்றை மட்டும் தெளிவாக்க விரும்புகிறேன். இப்படியான நடவடிக்கைகளை நான் நியாயப்படுத்தவோ மன்னிக்கவோ அல்லது விலக்களிக்கவோ முயற்சிக்கவில்லை. நான் சொல்ல வருவது என்னவென்றால், பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் சொல்வதில் இருக்கும் சிக்கல் காரணமாக இந்த தேசிய விடுதலை இயக்கங்களை ஜெனிவா மரபுகளின் கீழ் கொண்டு வந்தார்கள்.

**நீதியரசரால் மீள் விசாரணை:**

**கேள்வி:** ஐயா, பயங்கரவாதத்திற்கு உங்களிடம் வரைவிலக்கணம் இருக்கிறதா?

**பதில்:** என்னிடம் இல்லை. நான் தந்த வரைவிலக்கணம் அவர் கேட்டதால் தந்தேன். அகராதியில் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணத்தைச் சொன்னேன். அவர்கள் அந்த வார்த்தையைப் பின்னோக்கி......

**கேள்வி:** இல்லை, நீங்கள் பயங்கரவாதம் என்ற வார்த்தைக்கு உங்களைப் பொறுத்த மட்டில், வரைவிலக்கணம் சொன்னீர்கள்.

**பதில்:** கனம் நீதிபதி அவர்களே! "World Politics and International Law" என்ற எனது முதல் புத்தகம், பயங்கரவாதம் பற்றிய ஐ. நா பொதுச்சபை விவாதங்கள் என்பனவற்றைப் படித்ததை அடுத்துத்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன். இவற்றின் அடிப்படையில் பயங்கரவாதத்திற்குச் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைவிலக்கணம் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். இப்படியான வன்முறைச் சம்பவங்களை யிட்டு எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

ஆன காரணத்தினாலேயே ஐ. நா சபை இந்த விதமான துண்டு துண்டான முறைகளை கையாள வேண்டியிருந்தது. எனது ஆராய்ச்சியின் அடிப்படையில் அதுதான் சிறந்த வழியென்று நினைக்கிறேன்.

**செல்வி யக்மன்:** நீதியரசரின் கேள்விக்கு மறுமொழி சொல்லவேண்டுமென்றால் நீங்கள் பயங்கரவாதத்தை வரைவிலக்கணம் செய்வீர்களா?

**சாட்சி:** அப்படி நான் முயற்சிக்கவே மாட்டேன். உண்மையில் ஐக்கிய அமெரிக்காவில் இவ்வாறு சிந்திக்கும் பேராசிரியன் நான் ஒருவன் மட்டுமல்ல. நான் நம்புகிறேன், இது நேரத்தை வீணாக்கும் வேலையாகும். ஒருக்கால் இது பயனற்ற விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். நாங்கள் வன்முறை பற்றிப் பேசுகிறோம்.

**நீதிமன்றத்தால்:**

**கேள்வி:** எனக்குப் பிரச்சனை இருப்பது உமக்குத் தெரியும். பயங்கரவாதம் என்றால் என்னவென்று தெரியாத ஒருவருக்கு, பயங்கரவாதத்துக்குச் சர்வதேச வரைவிலக்கணம் இல்லை என்று தெரிந்தவருக்கு, பயங்கரவாதம் என்ற வார்த்தையை வெறுக்கிற ஒருவருக்கு, அதிகாரம் 3 இன் "சர்வதேச பயங்கரவாத்துக்கு எதிரான யுத்தத்தில், சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்பதைக் காப்பாற்றல்" (Preserving the Rule of Law in War against International Terrorism) என்ற தலைப்பைப் பார்க்கும்போது எனக்குப் பிரச்சனையாக இருக்கிறது.

இது முற்றிலும் புதிய விடயமாகும். பயங்கரவாதம் என்ற சொல்லைப் பிடிக்காத ஒருவர் சர்வதேச பயங்கரவாதம் என்ற சொல்லைத் தமது கட்டுரையின் பக்கம் 82 இல் உபயோகிக்கிறார்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான றீகன் நிர்வாகத்தின் யுத்தத்தில்........

இங்கே ஒரு நபர், ஐயா, நீங்கள்தான் அவர் அந்த வார்த்தையைப் பிடிக்காத ஒருவர், அதன் அர்த்தம் தெரியாத ஒருவர், அந்த வார்த்தையை அதிகாரங்களின் தலைப்பாகத் தேர்ந்தெடுக்கிறார். நான் வாசிக்கவில்லை—— ஒரு நிமிடம். அடுத்த பக்கம்:

"லெபனான் மீதான படையெடுப்புக்குப் பயங்கரவாதத்தின் பதில்......"

மீண்டும் உமக்குத் தெரியாத சொல்லை பயன்படுத்துகிறீர்.

நீங்கள் மெத்தப் படித்தவர். ஆனால் அந்தச் சொல்லுக்கு அர்த்தம் தெரியாத நீர் அந்தச் சொல்லை உமது கட்டுரையில் தொடர்ந்து உபயோகிக்கிறீர். நான் முன்பு தெரிவித்தவாறு அந்தக் கட்டுரையைப் படிக்கவில்லை. எனக்குப் பிரச்சனை இருக்கிறது. தயவுசெய்து அதை நீங்கள் எனக்கு விளங்கப்படுத்த முடியுமா?

**பதில்:** நிச்சயமாக, நீதிபதி அவர்களே! "சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம்" ("War against International Terrorism") என்ற வார்த்தைகள் என்னுடையதல்ல. அது றீகன் நிர்வாகத்தின் சொற்பிரயோகம். அதை நான் எனது கட்டுரையில் விளங்கப்படுத்தி இருக்கின்றேன். றீகன் நிர்வாகம் சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக யுத்தம் செய்யப்போவதாகப் பகிரங்கமாக அறிவித்திருந்தது. எனவே அந்தச் சொற்பிரயோகம் றீகன் நிர்வாகத்தினுடையது. எனது சொற்பிரயோகம் அல்ல.

**கேள்வி:** அப்படி நீங்கள் உங்களது கட்டுரையில் சொல்லியிருக்கிறீரா?

**பதில்:** ஆம். அப்படி விளங்கப்படுத்தி இருக்கிறேன்.

**கேள்வி:** அப்படி அது உம்முடைய சொற்பிரயோகம் அல்ல றீகன் நிர்வாகத்தினுடைய சொற் பிரயோகம் என்று சொல்லியிருக்கிறீர்.......?

**பதில்:** பயங்கரவாதம் அர்த்தமற்ற....... 81ல் றீகன் நிர்வாகம் பதவிக்கு வந்தபோது, சனாதிபதி கார்ட்டர் அவர்களது மனித உரிமைக் கொள்கையை மாற்றிவிட்டு சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக யுத்தம் செய்வதே தனது வெளிநாட்டுக் கொள்கையின் அச்சாணியாக இருக்கப் போவதாகப் பிரகடனப்படுத்தியது. இராஜாங்க செயலாளர் அவர்களுடைய அறிக்கைக்கு அடிக்குறிப்பு இங்கு இருக்கிறது. பெரிய பிரச்சனை பக்கம் 79, அடிக்குறிப்பு 1. எனவே அந்தச் சொற்பிரயோகம் றீகன் நிர்வாகத்தினுடையது. எனது சொற்பிரயோகம் அல்ல.

**கேள்வி:** ஆனால், நீங்கள் அதைத் தொடர்ந்து உபயோகித்துள்ளீர்கள்.

**பதில்:** நான் உபயோகித்திருக்கிறேன். பயங்கரவாதம் என்ற சொல் அர்த்தமற்ற, சர்வதேச சட்டத்தில் பொருளற்ற, அரசியல் சிந்தனையற்ற சொல்லாகும். நான் எனது முன்னைய கற்கை அடிக்குறிப்பில் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் காண்பது முடியாத காரியம் என்று சொல்லியிருந்தேன். அது இப்படிக் காட்டுகிறது:

பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு இனிமேல்தான் சர்வதேச சமூகம் ஒரு சட்ட அல்லது அரசியல் அர்த்தம் காணவேண்டும். ஐ. நா சபையின் பயங்கரவாதத்துக்குரிய குழு கூட பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் காண்பதில் இணக்கம் காணமுடியவில்லை.

தொடரும்——

www.tamilarangam.net



# "முல்லை" வெற்றியின் பன்முகப் பரிமாணம்

(முல்லைத்தீவு நகரில் பரந்த நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவத் தளம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டு இம் மாதத்துடன் ஓராண்டாகிறது. இதன் நினைவாக, தமிழீழத்திலிருந்து வெளிவரும் 'வெளிச்சம்" திங்கள் இதழில் முல்லை வெற்றி பற்றிப் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையை இங்கு தருகின்றோம்.)

**வி**டுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்படும் இராணுவ முகாம்களினதும், பெரும் தளங்களினதும் எண்ணிக்கை ஏறுமுகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. வெற்றியின் உச்சத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கும் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் இது ஒரு ஆச்சரியத்துக்குரிய அம்சம் அல்ல என்ற போதிலும் விடுதலைப் புலிகளின் அண்மைக்கால சாதனைகள் எதிரியின் மூச்சுக்குழலையே இறுகவைத்துத் திக்குமுக்காட வைக்குமளவுக்கு பன்முகப்பட்ட பலாபலன்களை விளைவிக்கும் ஆற்றல் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன.

இந்நிலையில்தான்:

முன்னைய சாதனைகளுக்குச் சிகரம் வைத்த சம்பவமாக முல்லை இராணுவத் தளம் தாக்கி அழிக்கப்பட்ட வெற்றிச் சமர் தனக்கென ஒரு தனித்துவமான முத்திரையைக் குத்தி நிற்கிறது. ஒரு அரசியல் நடவடிக்கையின் அல்லது தாக்குதலின் வெற்றி – தோல்வி அழிக்கப்படும் தலைமையையும், வகுக்கப்படும் திட்டங்களைப் பொறுத்துமே அமையும் என்பது உலக வரலாறு பெற்ற அனுபவம். ஓயாத அலைகளாகி எதிரியின் முழங்கால் சில்லை முறித்த இம்முகாம் அழிப்பு – முழுக்க முழுக்க எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் தலைமையில் திட்டமிட்டு வழிநடத்தப்பட்டது. அகில உலகையே வியக்க வைக்கும் அவரது அளப்பற்ற ஆற்றல் அடியிலிருந்து முடிவரை வியாபித்து, ஆகக் குறைந்த இழப்புகளுடன் மிகப் பெரும் வெற்றியைப் பெற்றுத் தந்தது. முல்லைத்தீவு இராணுவத் தளம் அழிக்கப்பட்ட சம்பவம் – ஒரு தளத்தை வெற்றி கொண்ட நிகழ்வாக மட்டுமன்றி, அதன் பயன் விளையும் பரப்பளவு ஒரு நகரை விடுவித்ததாக உள்ள அதேவேளையில், ஒரு மாவட்டத்தின் வாழ்நிலையிலும் மாற்றம் உருவாக்கும் அளவிற்கு மகத்துவம் மிக்கதாகத் திகழ்கிறது. அரசியல், இராணுவ, பொருளாதார, கலாசார ரீதியில் இந்த வெற்றி ஏற்படுத்திய பாதிப்பு – மிக வலுவான சாதக அம்சங்களைக் கொண்டுள்ளது.

சிறிலங்கா இராணுவம் யாழ். குடாநாட்டுக்குள் தன் ஆக்கிரமிப்புப் பாதங்களை அகல வைத்து தன் வெற்றியை யாழில் கொடியேற்றியதன் மூலம் சர்வதேசத்திற்கும் பிரகடனம் செய்தது. குடாநாட்டின் பல பகுதிகளில் இன்னும் சிறிலங்கா இராணுவம் தன் கட்டுப்பாட்டை நிலைநிறுத்த முடியாத நிலையிலும் தனது பரப்புரைச் சாதனங்கள் மூலமும் சிறிலங்காவின் மக்கள் தொடர்புச் சாதனங்கள் ஊடாகவும் யாழ். குடாநாட்டை வெற்றி கொண்டதாகவும், விடுதலைப் புலிகளை இனிப் பெரியளவில் செயற்பட முடியாதவாறு நசுக்கிவிட்டதாகவும் ஒரு பிம்பத்தை உருவாக்கியது. முல்லைத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் வெற்றியின் மூலம் – புலிகள் பலவீனப்பட்ட கதை – பரிதாபத்துக்குரிய முறையில் புஸ்வாணமாகியது. 1400க்கும் மேற்பட்ட படையினரைக் கொண்ட ஒரு முகாமைத் தாக்கியழிக்கும் அளவிற்கு விடுதலைப் புலிகள் சக்திமிக்கவர்களாகவும், ஆற்றல் குறையாதவர்களாகவும் உள்ளனர் என்பது நிரூபிக்கப்பட்டது. அது மட்டுமின்றி, முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட பெரும் தொகை ஆயுதங்கள் விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியாக மேலும் பலம் மிக்க சக்தியாக உருவாக வழிவகுத்தது.

தொடர்ச்சியான தோல்விகளால் துவண்டு போயிருந்த சிறிலங்கா இராணுவத்திற்கு, 'சூரியக்கதிர்' மூலம் காட்டப்பட்ட வெற்றிமாலை – உளவியல் ரீதியாக ஒரு பெரும் எழுச்சியை ஏற்படுத்தும் என்ற சிறிலங்கா அரசின் கனவு – முல்லைத்தள வெற்றியால் முற்று முழுதாகச் சிதைத்து அழிக்கப்பட்டது. "விடுதலைப் புலிகளை வெல்ல மேலதிகமாக இன்னும் 15,000 துருப்புகள் தேவை" என்ற குரல் இராணுவத் தரப்பில மீண்டும் எழும்பத் தொடங்கியுள்ளது. இது வெறும் குரலாக மட்டுமன்றி, ஜனாதிபதி, அமைச்சர்கள் உட்பட, இராணுவ அதிகாரிகள் வரை இராணுவத்திற்கு ஆள் திரட்டும் பிரச்சார இயக்கத்தில் இறங்கவேண்டிய நிலையும் எழுந்துள்ளது. ஆனால், இராணுவத் தரப்பில் ஏற்படும் இறப்புகளும் – இழப்புகளும் சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் இணைவதிலிருந்து தூர விரட்டுவது மட்டுமன்றி, ஏற்கனவே படையில் உள்ளவர்களையே தப்பி ஓடவும் வைக்கின்றது. சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களின் தொகை 24,000க்கும் அதிகம் என்பது இங்கே கவனிக்கத்தக்க ஒரு அம்சமாகும். சிங்கள மக்களின் கண்களில் சூரியக்கதிர் பரப்புரையின் ஊடாக பலமிழந்து போனவர்களாகக் காட்டப்பட்ட விடுதலைப் புலிகள் – மீண்டும் விஸ்வரூபம் எடுத்து, சிங்கள அரசையும், படையினரையும் சித்தம் கலங்க வைத்த பெருமை – இந்த முல்லை வெற்றிக்கு உரியதாகும்.

ஆனைமிறவுப் படைத்தளம் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல், விடுதலைப் புலிகளுக்குப் பல சாதகமான விளைவுகளைத் தந்த போதிலும், தளம் வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பம் நெருங்கும் போது, கடல் மூலம் தரையிறக்கப்பட்ட பெரும் தொகைத் துருப்பினர் போரின் போக்கையே திசைதிருப்பினர். விடுதலைப் போராளிகள் தரப்பிலான போர் 'தாக்குதல்' என்ற நிலையிலிருந்து – 'தரைவழி நகர்வைத் தடுத்தல்' என்ற கட்டத்திற்கு மாற்றமடைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 8000 துருப்புக்கள் தரையிறக்கப்பட்ட போதும், அவர்கள் ஆனையிறவுத் தளத்தைச் சென்றடைய ஒரு மாதம் தேவைப்பட்டது. இதன் மூலம் விடுதலைப் புலிகள் மரபுவழிப் போர் முனையிலும் நின்றுபிடிக்கக்கூடிய சக்தி மிக்கவர்கள் என்பது நிரூபிக்கப்பட்ட போதிலும், கடல் மூலமாகப் பெரும் தொகைத் துருப்புக்களைத் தரையிறக்கு வதன் மூலம் எந்தவொரு படை முகாமையும் தம்மால் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையை சிங்கள அரசிற்கும், படையினருக்கும் ஏற்படுத்தியது.

ஆனால், முல்லைத்தீவைக் காப்பாற்றத் தரையிறக்கப்பட்ட ஒரு பகுதித் துருப்புக்கள், விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டு கடும் தாக்குதலுக்கு உள்ளாகித் திரும்பி ஓடியதும், கடல் வழியாகத் தரையிறங்க முயன்ற இன்னொரு பகுதியினர், கடற்புலிகளின் கடும் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டதும், கரும்புலிகளால் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதும் வரலாற்றையும், சிங்களப் படையினரையும் ஒரு உலுப்பு உலுப்பியது. தரையிறக்கி முகாம்களைக் காக்கும் நப்பாசை வெறும் கனவாகவே மாற்றப்பட்டது. ஆனையிறவில் சிறிலங்கா இராணுவம் பெற்ற நம்பிக்கை – முல்லைத்தீவில் முற்றாகத் துவம்சம் செய்யப்பட்டது. இது சிறிலங்கா இராணுவத்தின் போர்த் தந்திரத்துக்கு விழுந்த மரண அடியாகும். சிறிலங்காவின் இராணுவ நிபுணத்துவம், வெளிநாட்டு இராணுவ நிபுணர்களால் மெருகு படுத்தப்பட்ட போதிலும், விடுதலைப் புலிகளின் வீரத்திற்கும் – அர்ப்பண உணர்வுக்கும் – போர் உபாயங்களுக்கும் முன் மீண்டும் ஒரு முறை செல்லாக் காசாகிப் போனது.

வங்காள விரிகுடாவைத் தொட்டு நின்ற இந்தத் தளம், வெறுமனேயே ஒரு இராணுவ முகாமாக மட்டும் இருக்க வில்லை. வடபகுதி இராணுவப் படைவீடுகளுக்கான ஆயுத, உணவு விநியோக மையமாகவும், திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான கடல்வழி விநியோகப் பாதையைப் பாதுகாக்கும் ஒரு கடற்படை நிலையமாகவும், தொலைத் தொடர்பின் இடைத் தொடர்பு நிலையமாகவும் திகழ்ந்தது. இத்தளம் அழிக்கப்பட்டதன் மூலம் வடபகுதி இராணுவ முகாம்களுக்கான விநியோக மையம் சிதறடிக்கப்பட்டது. பெருமளவு ஆயுதங்களையும், உணவு மற்றும் மருந்து வகைகளையும் களஞ்சியப்படுத்தி வைத்து தேவைக்கேற்றவாறு உடன் விநியோகம் செய்யும் நிலை முறியடிக்கப்பட்டது. இதன் காரணமாக, வடபகுதிப் படை முகாம்களின் பாதுகாப்பும் கூட பலவீனப் படுத்தப்பட்டுவிட்டது. அத்துடனன்றி, கடல் விநியோகப் பாதையின் பாதுகாப்பும் கேள்விக்குரியதாகிவிட்டது. காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலை வரையிலாக கடற்பரப்பில் எங்கு வைத்தும் கடற்புலிகளின் தாக்குதல் இடம்பெறலாம் என்னும் அச்சத்துடன், அதற்கேற்ற பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடனேயே கடல் விநியோகங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை எழுந்தது. இது சிறிலங்கா அரசுக்கு வடபகுதியில் ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஒரு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. மேலும், முல்லை முகாம் மூலமாக இதுவரை இடம்பெற்ற படையினரின் தொலைத் தொடர்பு அறுக்கப்பட்டுவிட்டது. இது கொழும்புக்கும் வடபகுதிக்குமான தொடர்புகளிலேயே கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தெளிவு.



முல்லைத் தளத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் இழக்கப்பட்ட பல கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளை எவ்வளவு தூரம் மேலதிகமாகப் பலப்படுத்தியதோ அவ்வளவு தூரம் இராணுவத்தைப் பல வீனப்படுத்தியுள்ளது. இவ் ஆயுத இழப்பை சிறிலங்கா அரசு பெரும் கொள்வனவு மூலம் நிச்சயமாக ஈடுசெய்தே ஆகவேண்டும். மேலும், இத்தள அழிப்பின் போது கொல்லப்பட்ட இராணுவத்தினருக்கு வழங்கவேண்டிய தொகை சிறு அளவினது அல்ல. இது மிகக் குறைந்த அளவில் கணக்கிட்டாலும் கூட 120 மில்லியன் ரூபாய்களுக்கும் கூடுதலாகவே அமையும். இது ஏற்கனவே துண்டுவிழும் தொகைகளால் அலங்கரிக்கப்பட்ட சிறிலங்கா அரசின் வரவு செலவுக் கணக்குகளுக்குக் குறைநிரப்புப் பிரேரணைகளைக் கூட்டுச் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும். இந்நிலை மேலும் சிங்கள மக்கள் மீதான மேலதிக வரிவிதிப்பாகவும், பொருள் விலையேற்றமாகவும், மானிய வெட்டுகளாகவும் வடிவெடுக்கும். இது சிங்கள தேசத்தைப் பொருளாதார ரீதியில் பின் தள்ளும் அதேவேளையில், அம் மக்களின் அரசு மீதான கசப்புணர்வாகவும் மாற்றமடையவே செய்யும்.

அரசியல் – இராணுவ ரீதியில் இவ்வெற்றி விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் பல சாதகமான விளைவுகளைப் பெற்றுக் கொடுத்த அதே வேளையில், சிறிலங்காவை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தியும், அரசியல் ரீதியில் பெரும் நெருக்கடிக்குள்ளும் தள்ளியது. எவ்வளவுதான் தொடர்பு சாதனங்களின் ஒத்துழைப்புடன் இத்தோல்வி மறைக்கப்பட்ட போதிலும் நடைமுறை விளைவுகள் எவ்வித்திலும் தடுக்கப்பட முடியாதவை.

முல்லைத்தள வெற்றியால் சிறிலங்கா

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

- நா. யோகேந்திரநாதன் (தமிழீழம்)

www.tamilarangam.net



# 24.06.97 அன்று பெரியமடு தாக்குதலின் போது

1. லெப்.கேணல். ஐங்கரன் (தனம்)
நாகலிங்கம் லோகராஜ்
கேப்பப்புலவு, முல்லைத்தீவு.

2. மேஜர். விவேகன் (சந்திரப்பிள்ளை)
யோகராஜா தில்லைநாதன்
மட்டக்களப்பு.

3. மேஜர். ரதி
சாமித்தம்பி தேவி
மட்டக்களப்பு.

4. மேஜர்.துளசி
இராமலிங்கம் குகபாலிகா
யாழ்ப்பாணம்.

5. மேஜர். இந்திரா
ராணு சித்திராதேவி
பம்பைக்குளம்
வவுனியா (தமிழ்நாடு).

6. மேஜர். விமல்
பத்திநாதன் பீரிஸ் விமல்பீரிஸ்
எட்டாம் வட்டாரம், பேசாலை
மன்னார்.

7. கப்டன். திவ்யா
இராமலிங்கம் தேவகி
லிங்கத்தேவர்மடு,
மன்னார்.

8. கப்டன். புதியவள்
லோகிதாஸ் சாந்தமீனா
யாழ்ப்பாணம், வன்னிமாவட்டம்.

9. கப்டன்.தமயா
விசுவலிங்கம் சித்திராதேவி
முதலாம் வட்டாரம், முத்தயன்கட்டு
ஒட்டிசுட்டான்.

10. கப்டன். இந்திராணி
கந்தையா புஸ்பராணி
இராமன் வீதி, புளியங்குளம், வவுனியா.

11. கப்டன். அன்பரசி
இராஜரட்ணம் ரஜனி
யாழ்ப்பாணம்.

12. கப்டன்.கலை
இரத்தினம் ராஜகுமார்
யாழ்ப்பாணம்
ஆயிரம் வீடமைப்புத்திட்டம், மாங்குளம்.

13. கப்டன்.பவளம்
விக்னேஸ்வரராசா கேமலதா
யாழ்ப்பாணம், ஸ்கந்தபுரம்.

14. கப்டன்.அன்பு
தங்கையா மகேஸ்வரி
உருத்திரபுரம்
கிளிநொச்சி, எட்டாம்கட்டை, அக்கராயன்.

15. கப்டன். ஜெயச்சந்திரன்
சிதம்பரப்பிள்ளை சிவநாதன்
புலிமாச்சினந்தகுளம், மாங்குளம்.

16. கப்டன். தேவகி
சின்னராசா பத்மராணி
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு.

17. கப்டன். பெரியதம்பி முகுந்தன்
தியாகராஜா நிதிராஜ்
யாழ்ப்பாணம்.

18. கப்டன்பூலோகன்
இராமநாதன் பரமசிவம்
யாழ்ப்பாணம்.

19. கப்டன். பரமலிங்கம்
நடராஜா ராஜரஞ்சித்
திருகோணமலை மாவட்டம்.

20. லெப். ஈசன்
வேலு ரவி
ஆனந்தப்புளியங்குளம்
நொச்சிக்குளம் , வவுனியா.

21. லெப்.மித்திரன்

22. லெப். நந்தா
கணபதிப்பிள்ளை குலரஞ்சிதம்
யாழ்ப்பாணம்.

23. லெப். ஜெயமதி யோகமதி
இரத்தினம் வதனி
யாழ்ப்பாணம்.

24. லெப்.காங்கேசன்
செல்லத்துரை சுரேஸ்குமார்.
றெட்பானா, விசுவமடு.

25. லெப். ஆரணி
கறுப்பையா அமுதவல்லி
பெரியகுளம் , 134ம் கட்டை
வவுனியா.

26. லெப்.சிவனேசன் /சிவகணேசன்
பொன்னுத்துரை கிருபாகரன்.
யாழ்ப்பாணம்.

27. லெப். அப்பன் /காந்தி
முருகுப்பிள்ளை சிறிபஞ்சநாதன்
யாழ்ப்பாணம்.

28. லெப். இயல்வாணன்
தியாகராசா சிறீஸ்காந்தன்.
யாழ்ப்பாணம்.

29. லெப். ஈழமாறன்

செல்வன் செல்வச்சந்திரன்.
யாழ்ப்பாணம்.
ஜெயபுரம், பூநகரி.

30. லெப். நித்தியா
திரவியம் அமுதினி
யாழ்ப்பாணம்.
புதுக்குடியிருப்பு
மாங்குளம்.

31. லெப்.நிரஞ்சனா
சின்னையா லோகினி
யாழ்ப்பாணம்.

32. லெப். சுயந்தன்
பழனியாண்டி சங்கர்
கொழும்பு
இராமனூர் புளியங்குளம், வவுனியா.

33. 2ம்.லெப். தென்பாண்டி
நவரத்தினம் குவேந்திரன்
திருகோணமலை.

34. 2ம்.லெப். யாழமுது / யாழரசி
கடம்பேஸ்வரன் வசந்தமலர்
புங்குடுதீவு
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

35. 2ம்.லெப். பரிமளா
அழகுதுரை கோமதி
திருகோணமலை விசுவமடு.

36. 2ம்.லெப். ஈழநிலா
ஐயாத்துரை றேணுகாதேவி
முத்தையன்கட்டு ஒட்டிசுட்டான்.

37. 2ம்.லெப். சரவணன்
சுப்பிரமணியன் கருணாகரன்
திருகோணமலை.

38. 2ம்.லெப். ஜெயப்பிரியா
நித்தியானந்தன் செல்வானந்தி
யாழ்ப்பாணம்.

39. வீரவேங்கை வசந்தா
முத்துரத்தினம் ரஜனி
திருகோணமலை.

40. வீரவேங்கை. திருச்செல்வி
சண்முகராசா ராமா
திருகோணமலை
அருணா வீடமைப்புத்திட்டம்
முத்தையன்கட்டு.

41. வீரவேங்கை செம்பருத்தி
கௌரியப்பாப்பிள்ளை அருள்ரஞ்சனி
கட்டைக்காடு
முள்ளியன், கண்டிக்குளம்.

42. வீரவேங்கை. மொழியரசி
பாக்கியநந்தன் தவரஞ்சனி
உருத்திரபுரம்
கிளிநொச்சி
எட்டாம் கட்டை
ஸ்கந்தபுரம்.

43. வீரவேங்கை. தமிழரசி
சந்திரலிங்கம் மதிவதனி
யாழ்ப்பாணம், அக்கராயன்.

44. வீரவேங்கை. சுடரொளி
வேலுச்சாமி சிறிதேவி
நானாட்டான், மன்னார்.

45. வீரவேங்கை பகீரதி
நடராசா சுபாசினி
புளியங்குளம், ஒட்டிசுட்டான்.

46. வீரவேங்கை. அருள்செல்வி
சின்னத்துரை விக்கினேஸ்வரி
யாழ்ப்பாணம்.
வள்ளிபுரம் புதுக்குடியிருப்பு.

47. வீரவேங்கை. இன்னழகன்
சின்னையா சிவசண்முகம்
சினத்தங்காடு, முல்லைத்தீவு
புதுக்குடியிருப்பு.

48. வீரவேங்கை. ஈழமனிதன்
கனகராசா ரவிச்சந்திரன்
17ம் கட்டை
வள்ளிபுரம், புதுக்குடியிருப்பு.

49. வீரவேங்கை. குலோத்துங்கன்
கனகலிங்கம் சிபேந்திரகுமார்
யாழ்ப்பாணம்.

50. வீரவேங்கை. தமிழ்நெஞ்சன்
ஞானப்பிரகாசம் ராசகுமார்
தென்னியக்குளம், துணுக்காய்
(இலுப்பைக்கடவை, பன்னியடி,
கள்ளியடி, மன்னார்).

www.tamilarangam.net

# வீரமரணத்தைத் தழுவிய மாவீரர்களின் விபரங்கள்



51. கப்டன். மதனரூபன்
சோமசுந்தரன் இசைச்செல்வன்
மட்டக்களப்பு.

52. லெப். புவனப்பன்
நாகமணி வேந்திரமூர்த்தி
மட்டக்களப்பு.

53. 2ம் லெப். ஜெயத்துகிலன்
ராஜகோபால் கிருஸ்ணகுமார்
மட்டக்களப்பு.

54. லெப். கேதீஸ்வரன்
குமாரசாமி குலசிங்கம்
மட்டக்களப்பு.

55. வீரவேங்கை. இரட்ணேஸ்வரன்
யோகராசா செந்தில்நாதன்
மட்டக்களப்பு.

56. வீரவேங்கை. பவளராஜா
சீனித்தம்பி ஜெகன்
மட்டக்களப்பு.

57. வீரவேங்கை. இன்பன்
நவரட்ணம் சிவானந்தம்
மட்டக்களப்பு.

58. லெப். கமண்டலன்
நடராசா யோகராசா
மட்டக்களப்பு.

59. லெப். உதயமூர்த்தி
நாகய்யா அசோக்குமார்
மட்டக்களப்பு.

60. 2ம் லெப். இசைமொழி
சித்திரவேல் மோகன்
மட்டக்களப்பு.

61. 2ம் லெப். குமாரலிங்கம்
தங்கராசா சிவலிங்கம்
மட்டக்களப்பு.

62. 2ம் லெப். தர்மதேவன்
கந்தசாமி சசிகரன்
மட்டக்களப்பு.

63. வீரவேங்கை. குருகுலன்
நல்லதம்பி பாலகுமாரன்
மட்டக்களப்பு.

64. வீரவேங்கை. கீர்த்திராஜா
யோகானந்தம் புஸ்பநாதன்
மட்டக்களப்பு.

65. கப்டன். லீலாகரன் / ரவி
செல்வராசா ரவீந்திரன்
மட்டக்களப்பு.

66. வீரவேங்கை. நன்மாறன்
பொன்னுத்துரை யமுனானந்தன்
மட்டக்களப்பு.

67. மேஜர். கோகிலநாதன்/ சாந்தன்
சரசய்யா பயஸ்
மட்டக்களப்பு.

68. லெப். சுரேஸ்
சுந்தரலிங்கம் சந்திரசேகர்
மட்டக்களப்பு.

69. 2ம் லெப். முரளீஸ்வரன்
இறையசிங்கம் பவளசிங்கம்
மட்டக்களப்பு.

70. வீரவேங்கை. வரோதயன்
மோகானந்தம் தவராஜா
மட்டக்களப்பு.

71. வீரவேங்கை. சுபர்தன்
இளையதம்பி வினாசித்தம்பி
மட்டக்களப்பு.

72. 2ம் லெப். திருமேனி
மகேசன் ரஜனிகாந்
மட்டக்களப்பு.

73. லெப். உதயவன்
குகராசா ரவீந்திரராசா
மட்டக்களப்பு.

74. வீரவேங்கை. வேணுகோபாலன்
வல்லிபுரம் குணரத்தினம்
மட்டக்களப்பு.

75. வீரவேங்கை. அறநெஞ்சன்
சங்கரப்பிள்ளை அகிலேஸ்வரன்
மட்டக்களப்பு.

76. வீரவேங்கை. சண்முகதாஸ்
ஐயாத்துரை சந்திரகுமார்
மட்டக்களப்பு.

77. லெப். கணமுகன்
கோபாலசிங்கம் நிர்மலன்
மட்டக்களப்பு.

78. 2ம் லெப். புவிதாசன்
ஆறுமுகம் ரஞ்சன்
அம்பாறை.

79. மேஜர். வரதராஜா
அன்புழகன் துஸ்யந்தன்
மட்டக்களப்பு.

80. மேஜர். திருமகன்
பாக்கியராசா புலேந்திரன்
மட்டக்களப்பு.

81. லெப். தவக்குமார்
கணவதிப்பிள்ளை பவளசிங்கம்
மட்டக்களப்பு.

82. வீரவேங்கை. ஜெயானந்தம்
சித்திரவேல் ஜெயக்குமார்
மட்டக்களப்பு.

83. கப்டன். சுசி / அனார்த்தன்
நாகமணி கோபாலரட்ணம்
மட்டக்களப்பு.

84. 2ம் லெப். ரஜனி
கணேஸ் புனிதரூபன்
மட்டக்களப்பு.

85. வீரவேங்கை. லோகதாசன்
கண்ணப்பன் சந்திரமோகன்
மட்டக்களப்பு.

86. வீரவேங்கை. சகாதேவன்
ஏரம்பமூர்த்தி மேகநாதன்
மட்டக்களப்பு.

87. கப்டன் சண்முகலிங்கம் / நகுலேந்திரன்
சவுந்தன் ராஜகுமார்
மட்டக்களப்பு.

88. லெப். சக்கரபாண்டி
வீரக்குட்டி பிரகலாதன்
அம்பாறை.

89. வீரவேங்கை. நீலரத்தினம்
வினாயகப்பிள்ளை யோகராசா
மட்டக்களப்பு.

90. லெப். கதிரவன்
மட்டக்களப்பு.

91. வீரவேங்கை. மதுசாகரன்
பஞ்சாச்சரம் கமலச்சந்திரன்
மட்டக்களப்பு.

92. கப்டன். அறிவுமணி / அறி
கந்தையா சுதாகரன்
4ம் பிரிவு, தர்மபுரம், கிளிநொச்சி.

93. லெப். ஈழவண்ணன்
கேசவன் வாமதேவன்
(மாத்தளை)
நெத்தலியாறு மேற்கு, விஸ்வமடு, கிளிநொச்சி.

## இறப்பற்றோர்....

வெட்டப்பட்ட கரங்கள்
வேகமுடன் வளர்கின்றன.
முறிக்க முறிக்க முளைவிடும்

மூர்க்கமான செடியைப் போல்,
கத்தரிக்கப்பட்ட கரங்கள்
கனுக்களைப் பிரசவிக்கின்றன.
சிதைக்கப்பட்டவைகள்
சிவப்பாக வெடிக்கின்றன.

நெரிக்கப்பட்ட குரல்வளைகள்
நெருப்பு வரிகளில்
முற்றுகையை எதிர்த்து
முழக்கமிடுகின்றன....

சூடுபட்ட,
சுவாசப்பைகள்
ஆக்கிரமிப்பாளனை
அவிப்பதற்கு
விடுதலை மூச்சை
வெம்மையாக
வெளியேற்றுகின்றன.

இறந்து போனான்
என எதிரியவன்
எக்காளமிடுகையில்,
பிணங்கள் இங்கே
பிறவி எடுக்கின்றன.

எதிரிகளே.....
துடிக்கப் பதைக்க
வதைத்துக் கொல்லுங்கள்:
அதனாலென்ன!
துண்டிக்கத் துண்டிக்கத்
துளிர்ப்பார்கள் வீரர்கள்.

எங்கள் எல்லை நீங்கி
உங்கள் படைகள்
ஓடும் வரை,
எங்கள் வீரர்க்கு
இறப்பே யில்லை.

உரிமை வேண்டி
உயர்ந்த கரங்கள்
ஆக்கிரமிப்புகளுக்கு
அடிபணிந்து போகாது !

ஆனையிறவுச் சமரில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட கப்டன் கஸ்தூரியினால் இறுதியாக எழுதப்பட்ட எழுதி முடிக்கப்படாத கவிதை வரிகள் இவை.

www.tamilarangam.net



# "முல்லை" வெற்றியின்......

அரசுக்கும், இராணுவத்திற்கும் ஏற்பட்ட பின்னடைவுகளும் பின் விளைவுகளும் அவர்களை மேலும் ஒரு நெருக்கடிக்குள் தள்ளியது. ஒரு முகாமின் பாதுகாப்பு விநியோகப் பாதைகள், தொலைத் தொடர்புகள் என்பன சிரமங்களுக்கும், கேள்விக் குறிகளுக்குள்ளும் தள்ளப்பட்டதுடன் எடுக்கப்படும் இன்னொரு இராணுவ நடவடிக்கையின் வடிவம் தொடர்பாகப் பாரிய மறு பரிசீலனைகள் நடத்தப்பட வேண்டியும் ஏற்பட்டது. பெருந்தொகை இராணுவத்தை இறக்கி முகாம்களைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை உடைத்தெறியப்பட்ட நிலையில், பெருந் தொகை நவீன ஆயுதங்கள் புலிகளால் இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலையில், அடுத்த கட்டம் தோல்விகளால் வரவேற்கப்பட வேண்டிய இக்கட்டும் சிறிலங்கா அரசுக்கு ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாததே.

முல்லை மாவட்டத்தின் கடல் வளம், மண் வளம், நீர்வளம் இம்மக்களின் செல்வச் செழிப்பின் சின்னங்கள். முல்லையும் மருதமும் ஒன்று கூடி உறவாடும் பிரதேசம் இது.

ஒரு காலத்தில் வங்கக் கடல் அள்ளித்தந்த மீனும், நண்டும், கணவாயும், இறாலும் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் மீன் சந்தை விலைகளை வரையறுக்குமளவுக்கு இம் மண்ணில் கடல் உற்பத்தி காத்திரமான பங்கை வகித்தது. முல்லை இறால் உல்லாச உணவு விடுதிகளின் உணவில் ஒன்றாகத் திகழ்ந்ததை மறக்க முடியாது. இது முல்லை நகரில் மாடமாளிகைகளை எழுப்பியது. செல்வத்தையும் செழிப்பையும் அள்ளி விதைத்தது. 'சின்னச் சிங்கப்பூர்' என்று கூட அழைக்கப்பட்டது. சிங்கள தேசத்திலிருந்து 'சம்மாட்டிகள்' வந்து நாயாற்றுக் கடற்கரையில் வாடி போட்டு மீன் அள்ளிச் சென்ற வரலாறே உண்டு.

**(இவ்வாறு கொக்கிளாயில் மீன் பிடிக்க வந்தவர்கள், மண் ஆக்கிரமிப்பாளராக மாற சிறிலங்கா இராணுவமும், அதன் காவல்துறையும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க மணலாற்றின் ஒரு பகுதியிலிருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது)**

எப்படியிருப்பினும், முல்லைக் கடலின் மீன் வளம் தமிழீழத்தில் மட்டுமின்றிச் சிங்கள தேசத்தில் கூட செல்வாக்குச் செலுத்துமளவுக்கு செழிப்பாயிருந்தது. இவ்வாறே சிலாவத்தை, அளம்பில், செம்மலை இவற்றின் தெங்கு உற்பத்தி எமது தேவைகளின் ஒரு குறிப்பிட்ட பகுதியை நிறைவு செய்தது. சிறு சிறு குளங்களையும் முத்து ஐயன் கட்டு என்ற பெரும் வாவியையும் தன்னகத்தே கொண்ட இந்த மாவட்டம், நெல்லிலும் ஏனைய மேட்டுப் பயிர்ச் செய்கைகளிலும் சிறப்புற்று ஒரு பெருமைமிகு விவசாய பூமியாகவும் திகழ்ந்தது. முள்ளியவளைப் பலாப்பழம் கவ்வியங்காட்டில் மணக்கும் . என்று கூறக் கூடிய அளவுக்கு இங்கு மாவும், பலாவும் செழித்தோங்கி நிறைந்திருக்கின்றன.

இத்தகைய ஒரு கிராமிய மணம் கமழும் இம்மாவட்டத்தின் மைய நகரில் முல்லை இராணுவ முகாம் 1991ல் பலப்படுத்தப்பட்டது. வெவ்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலம் வட்டுவாகல் பாலம் முதல் சிலாவத்தை வரையிலான ஒரு நீண்ட பிரதேசத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக் கரங்கள் அகல விரிந்தன. மீன் பரந்து காயும் அக்கடற்கரைப் பரப்பு வெறும் வெம்மை படர்ந்த பிரதேசமாகியது. மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் அலங்கரித்த அந்நகர் சுடுகாட்டின் நிலையடைந்து பொலிவிழந்தது. நகரமும் அதனைச் சுற்றியிருந்த இடங்களும் படையினரின் முகாம்களாக்கப்பட்ட போதிலும் முழு மாவட்டமுமே பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டது. இன்றைய சந்தைப் பொருளாதார யுகத்தில், ஒரு பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமங்களின் பிரதான பொருளாதார மையமாக நகரம் வாழ்வது தவிர்க்க முடியாதது. கடல்படு பொருட்கள் அளவில் மட்டுமின்றி, விவசாய இடுபொருட்கள், உபகரணங்கள் கொள்முதலுக்கும், உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கும் நகரமே மையமாகத் திகழும். இந்நிலையில், முல்லை நகர் சிதைக்கப்பட்டதும், முழு நகரமுமே இராணுவப் பிரதேசமாக மாற்றப்பட்டதும் முழுமாவட்டத்தினதும் பொருளாதார வாழ்வையும் பாதித்தது. மீன் உற்பத்தியில் பெரும் பங்கு கொண்ட கடற்பிரதேசங்கள் இராணுவத்தின் கையில் விழ – செழிப்பான வாழ்வில் நீந்திய இக்கரையோர மக்கள், அகதிகளாகி அங்குமிங்குமாக அகதி வாழ்வுக்குள் தள்ளப்பட்டு அலைய வேண்டி ஏற்பட்டது. ஏழ்மையும் ஏதிலித்தன்மையும் அவர்களின் நிரந்தர உடமைகளாகின.

முல்லை இராணுவத் தளத்தின் வீழ்ச்சியுடன், தன் குழந்தைகள் மீண்டும் தன் மடியில் தவழ்வதை எண்ணி வங்கக் கடல் அன்னை அலைக்கரம் எழுப்பி ஆர்ப்பரிக்கிறாள். கழுத்தை நெரித்த வறுமையை இனி வலை வீசி விரட்ட மீனவத் தொழிலாளர்கள் வெண்மணற் பரப்பில் வள்ளம் தள்ளப் புறப்பட்டு விட்டனர். வற்றாப்பளை வயல் வெளிகளும், வரண்டு கிடந்த நெற்பரப்புகளும் பச்சை நெற்தளிர்களைப் பிரசவம் செய்வதற்குத் தயாராகி விட்டன. அளம்பில் தென்னை மரங்கள் தலையாலே நீர் சுமந்து தம்மை வளர்த்த பரம்பரையை வரவேற்க மென்காற்றில் குருத்தோலை அசைத்துக் குரல் கொடுக்கின்றன. கூட்டுமொத்தத்தில் தம்மேல் இறுக்கப்பட்ட ஒரு பெரும் பொருளாதார விலங்கு உடைய புதிய வாழ்வின் ஒளி வெள்ளத்தில் திளைக்க முழு முல்லை மாவட்டமே தயாராகத் தொடங்கியது.

கந்தரோடையில் புறப்பட்டு கரையோரப் பாதையாகக் கதிர்காமம் செல்லும் வழியில் வற்றாப்பளையில் தங்கி, பொங்கல் கண்டு புக்கை தின்று புறப்படுவது எமது மண்ணில் காலம் காலமாக இடம்பெற்ற மரபு. வற்றாப்பளை அம்மன் கோவில் பொங்கல் என்பது ஒரு மாவட்ட மக்களின் வழிபாடு என்ற அளவில் நில்லாது வட தமிழீழத்தின் பொதுவிழா என்றளவுக்கு பொலிவுற்று இருந்தது. யாழகத்திலிருந்து பொங்கிப் படைக்க வரும் மக்கள், உறவினர் வீடுகளில் தங்குவதும், திரும்பிச் செல்லும்போது வன்னியின் சிறப்புப் பொருட்களான தேன், தயிர், பலாப்பழம் என்பன கொண்டு செல்வது என உறவுகள் மெருகுபடுத்தப்படும். மேலும் இக்காலத்தில் பல திருமணப் பேச்சுகளும், நிச்சயதார்த்தங்களும் இடம்பெறுவதுண்டு. இங்கு ஆண்டுதோறும் இடம்பெறும் முல்லை மாவட்டத்திற்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்ட கோவலன் கூத்தையும் கண்டு களிப்பதுண்டு. இராணுவ ஆக்கிரமிப்பு எல்லைக்குள் வற்றாப்பளை அகப்படாத போதிலும் எறிகணை வீச்சில் பொங்கல் நாளில் பலி கொள்ளப்பட்ட சம்பவம் எமது பாரம்பரிய மரபொன்றை உருக்குலைத்தது. முல்லைத்தள இராணுவ வீழ்ச்சியுடன், மீண்டும் எமது கண்ணகை அம்மன் கோவிலில், நந்திக்கடலில் நீரெடுத்து விளக்கேற்றி பொங்கி மகிழும் நாள் வந்துவிட்டது. ஊற்றங்கரைப் பிள்ளையாரும் தேரோடும் வீதியில் ஊர்வலம் வரத் தயாராகி விட்டார். முல்லை நகரில் பற்றை மண்டிப் பொலிவிழந்து கிடந்த தேவாலயங்களில் இனி ஆராதனை மணி ஆர்த்தெழும். மகுடிக் கூத்தும், காத்தவராயன் நாடகமும் இனி மீண்டும் புதுப் பொலிவுடன் மேடையேறும். ஒரு காலத்தில் கடற்பாட்டுகளைக் கேட்டுக்கேட்டே மகிழ்ந்திருந்த முல்லைக் கடலலைகள் மீண்டும் அற்புதமான நாட்டாரிசையில் குளித்து மகிழும்.

இவையெல்லாவற்றிலும் விட, முல்லை நகரில் பிறந்து வளர்ந்து வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு பகுதித் தமிழீழ மக்கள், தம் உயிரினும் மேலான சொந்த மண்ணைப் பிரிந்து, செழித்த வாழ்வை விட்டு அகதிகளாக இருந்த நிலை மாறிவிட்டது. தம் உடலும், உயிரும் இரண்டறக் கலந்த தம் சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டனர். மீண்டும் பனைமட்டை வேலிகள் எழ, உள்ளே ஒரு பண்பாடு சார்ந்த வாழ்வு மலருகின்றது. கலையும், கலாசாரமும் அந்த மண்ணில் வண்ணக் கோலங்களை வரையத் தயாராகி விட்டன. அது மட்டுமின்றி, இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ் குடாநாடு, கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள், அச்சமின்றி வாழ முல்லை மாவட்டம் தன் இருகரங்களையும் விரித்து விட்டது.

ஆம்.

முல்லை இராணுவத்தள வீழ்ச்சியுடன் மீண்டும் அரசியல், இராணுவ, பொருளாதார, கலாசார ரீதியாக தமிழீழ மக்களின் நிலையும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் புது உத்வேகத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன. அதேவேளையில், இது சிங்கள அரசையும், அதன் இராணுவத்தையும் வெகுதூரம் பின தள்ளியிருக்கிறது. பல்பரிமாண நன்மைகளைத் தந்த இவ்வெற்றி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு முன் பாய்ச்சலாகும். ✷

# போற்றுதலுக்கு உரியோர்......

சிதைவுக்குள்ளாக்கியுள்ளது. இதனால் சிறிலங்கா இராணுவ அரசியல் பெரும் மாற்றத்திற்குள்ளாகியுள்ளது. அதேவேளை சிறிலங்கா வெளியுறவுக் கொள்கையைக்கூட மாற்றியமைத்துள்ளது. இவ்வாறான மாற்றங்களுக்குக் காரணமாக விளங்கியுள்ள இந்தக் கரும்புலிகளின் அற்பணிப்புகள் எதிரிகள் எவராலும் புரிந்து கொள்ள முடியாதவை. அது முன்னுதாரணத்துடன் இம்மண்ணுக்கேயுரிய சிறப்பான தனித்துவமாகும். ஆகையினால் இது இம்மண்ணில் உள்ளவர்களே விளங்கிக் கொள்ளக் கூடியதொன்றாகும். ஆனால் இந்தக் கரும்புலிகள் வேறு எந்தக் குறிக்கோளும் இன்றி தமது மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் தமது தாக்குதலை நடத்தச் செல்லும் உன்னத புருஷர்கள் என்பதை மட்டும் உலகம் புரிந்து கொள்ளவேண்டும். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போல கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக்கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடை முறிப்புக்கள். எதிரியின் ஆயுத பலத்தை மனோபலத்தால் உடைத்தெறிபவர்கள். இந்த வகையிலேயே இந்த மாவீரர்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உறுதியாக்கியவர்கள். இவ்வாறாக மரணத்தை வென்ற மாவீரர்கள் தமிழ் மக்களின் வணக்கத்திற்கும், போற்றுதலுக்கும் உரியவர்கள். இவர்களின் அர்ப்பணிப்பும், தியாகங்களும் மக்களின் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளப்பட வேண்டியவை. அப்பொழுதுதான் அவர்களின் அர்ப்பணிப்பு அர்த்தம் பெறும். இலட்சியம் ஈடேறும். தமிழீழம மலரும் வாய்ப்பு உருவாகும். தமிழரின் சுதந்திரம் உறுதியாகும். ✷

# பொருத்தமான....

பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையோ ஏற்றுக் கொள்வார்களோ இல்லையோ கருணாரட்ண சரியானதொரு எச்சரிக்கையை நல்லதொரு சந்தர்ப்பத்தில் விடுத்துள்ளார் என்று கூறலாம்.

வன்னிப்படையெடுப்பை சிறிலங்கா இராணுவம் ஆரம்பித்தபோதே இப்படை நடவடிக்கையை சிறிலங்கா இராணுவத்திற்கு புதைகுழியாக மாறக்கூடும் என இராணுவ ஆய்வாளர்கள் பலர் ஆரூடம் தெரிவித்திருந்தனர். ஆயினும் அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தற்பொழுது இது ஓரளவுக்கு உண்மையாக மாறியுள்ளது பெரும் எச்சரிக்கையாக உள்ளது. அதாவது சிறிலங்கா இராணுவம் மேலும் வன்னிக்குள் ஊடுருவ முயன்றால் அதன் புதைகுழி அங்குதான் இருக்கும் என்பது புலிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வன்னி மீதான படை நடவடிக்கையைத் தொடர்வதும் கைவிடுவதும் சிறிலங்கா ஆட்சியாளர்களின் முடிவை பொறுத்தே உள்ளது. ஒரு சிலரின் வறட்டுக் கௌரவத்திற்காக புதைகுழிக்குள் இராணுவத்தை இறக்குவதா? அன்றி இராணுவத்தின் தற்பாதுகாப்புக்காக இந்த படை நடவடிக்கையை கைவிடுவதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியது இன்று ஆட்சியில் உள்ளவர்களின் கைகளிலேயே உள்ளது. ஆனால் அரசு எதனை மேற்கொண்டாலும் சந்திரிகா அரசின் கடந்தகால தவறின் விளைவாகவே அது இருக்கும். ✷

## பல கோவில்கள் இராணுவ முகாமாகிறது சிறு முகாம்கள் மூடப்படுகிறது

யாழ். குடாநாட்டில் தனித்திருக்கும் சிறுசிறு முகாம்களை சிறிலங்கா இராணுவம் மூடி வருகின்றது. இதேவேளை சில இடங்களில் பெரிய முகாம்கள் அமைக்கப்பட்டும் வருகின்றன.

சுண்டுக்குளி ஈச்சமோட்டைப் பகுதியில் அமைந்திருந்த முகாமை மூடிய இராணுவத்தினர் 4ஆம் குறுக்குத் தெருச் சந்தியில் பெரிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். வடமராட்சியில் அல்வாய் தேர்முட்டிச் சந்தி இராணுவத்தினரின் முகாமாக மாற, நெல்லியடியில் உள்ள கேணியடி வைரவர் கோவிலடியிலும் இராணுவம் முகாமிட்டுள்ளது. இவற்றையடுத்து இவற்றை அண்டிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் வீடுகள் அதன் சொந்தக்காரரினால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இது இவ்வாறிருக்க, யாழ். குடாநாட்டில் வானொலிப் பெட்டிகளை தெருவில் கொண்டு செல்வதற்கு படையினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

www.tamilarangam.net





# அன்பான தமிழ் மக்களே! துன்பப்படும் தமிழீழ மக்களின் துயர் துடைப்பிற்குத் தாராளமாக உதவுங்கள்

1995, 1996, 1997ம் ஆண்டுகள் தமிழீழத்தைப் பொறுத்தவரையும் தமிழீழத்தில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையும் மிகவும் துன்ப துயரங்களைச் சந்தித்த ஆண்டுகளாகும்.

தமிழ் இனத்திற்கு எதிராக குறிப்பாக இலங்கையில் வடபகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய இராணுவ நடவடிக்கைகள், பெருந் தொகையான மக்களை இடம்பெயர வைத்தது. 1995 ~ஆடியில் யாழ்குடா நாட்டில் ஆரம்பிக் கப்பட்ட "முன்னேறிப்பாய்தல்" இராணுவ நடவடிக்கையில் இருந்து "ட்றகன்பயர்" "கைகுலுக்கல்", "இடிமுழக்கம்" "சூரியகதிர் 1,2,3" ஆரம்பித்து "எடிபல", "ஜெயசிக்குறு" எனத் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இடம் பெயர்ந்ததனால், தமது வாழ்வு நிலைகளையும், வாழ்வியக்கங்களையும் இழந்து உடல், உள ரீதியாகப்பாதிக்கப்பட்டு அடிப்படை வசதிகளற்று வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில் சூரியக்கதிர் 2, 3 இராணுவ நடவடிக்கைகளிலும், சத்ஜெய இராணுவ நடவடிக்கையிலும் இடம்பெயர்ந்த 50,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அரச உலர் உணவு நிவாரணம் பெற முடியாதபடி அரசு தடைச்சட்டங்களைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகின்ற வேளை 1997 வைகாசியில் இதுவரை பல இராணுவ நடவடிக்கைகளிலும் இடம்பெயர்ந்து உலர் உணவு பெற்று வந்த 104,910 குடும்பங்களைச் சேர்ந்த 421,462 பேரில் 58,660 குடும்பங்களைச் சேர்ந்த 238,462 பேர்களின் உணவு முத்திரைகளை வெட்டி அவர்கள் உணவு நிவாரணம் பெறமுடியாதபடி நடைமுறைச்சட்டத் தை அமுலாக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்த வகையில் வன்னிப்பகுதியில் நான்கு மாவட்டங்களான கிளிநொச்சி. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மாவட்டங்களில் வாழும் இம்மக்கள் பெரும் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் சூழ்நிலை உருவாக்கியுள்ளது.

அதுமட்டுமன்றி. நிரந்தரமாக, நிம்மதியாக வாழ்ந்த மக்கள், தொழில் இழந்து தொழில் வாய்ப்பு கிடைக்காத நிலையிலும் சமூக அபிவிருத் தியை அடையாத நிலையிலும் தமது எதிர்காலத் தைக் கேள்விக்குறியாக்கி வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த வகையில் அரசு தனது நிதி ஒதுக்கீ டுகளையும் நிதிச்செயற்பாடுகளையும் மட்டுப்படுத்தி யும் கட்டுப்படுத்தியும் வரும் சூழ்நிலையில் தமிழீ ழப்பகுதியில் ஒரே ஒரு தேசிய அரச சார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பாதிக் கப்பட்ட தமிழ் மக்களின் நிவாரண புனர்வாழ்வு அபிவிருத்திப்பணிகளில் மன்னின்று உழைத்தும் சேவையாற்றியும் வருகின்றது.

## அன்பான சர்வதேச சமூகமே!

தமிழீழத்தில் இடம்பெயர்ந்து உயிரிழந்து, உடமை இழந்து, உரிமை இழந்து, வலு இழந்து, வாழ் விழந்து. உறவுகளைப் பிரிந்து அடிப்படை வசதி களற்று அல்லல்பட்டு அவதிப்பட்டு துன்ப துயரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ச்ச மூகத்தைக் காப்பாற்றத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு உதவுங்கள்.

இடம் பெயர்ந்ததால் தமது வாழ்வு நிலைகளை இழந்தும் வாழ்வு இயக்கங்களை இழந்தும் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி நிற்கும் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து செயலாற்ற முன்வாருங்கள்.

அரசினுடைய அடக்கு முறைகளினாலும் தடைகளினாலும் தடைச்சட்டங்களினாலும் உணவற்று உடைவசதிகளற்று, சுகமிழந்து, போசாக்கிழந்து கல்வி இழந்து, ஏங்கி நிற்கும் குழந்தைகளினதும் சிறுவர்களினதும் மாணவர களினதும் வளமான சிறந்த எதிர்காலத்திற்கும் நல்வாழ்விற்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் புனிதமான சேவையிலும் பாதையிலும் பணியாற்று வதற்கு நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் துயர் துடைப்பு வாரத்தில் மிகப்பெருமளவிலான தமிழ் மக்கள் தங்கள் பங்களிப்பைத் தாராளமாகச் செய்திருந்தனர். அடுத்த பத்திரிகையில் சகல தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சகல கிளைக ளாலும் மேற்கொள்ளப்பட்ட இப்புனித நிதி சேகரிப்புப்பணி பற்றி விவரமாகத் தரவுள்ளோம். தொடர்ந்தும் உங்கள் தொடர்ச்சியான ஆதரவை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேண்டி நிற்கிறது.

இந்த வேளையில் நீங்கள் அளிக்கும் சிறு சிறு உதவிகள் அங்கு தெரு ஓரங்களிலும் மரங்களின் கீழும், காடு களிலும், பாடசாலைக் கட்டடங்களிலும் கூடாரங் களிலும் வானத்து மழையையும் வெயிலையும் தாங்கி வாழும் எம் இன மக்களின் துயர் போக்க நிச்சயமாக உதவும். எனவே வாரி வழங்கி உதவுங்கள்

### தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| **TRO** Canada: | Ph: (1416)463 7647 |
| **TRO** Denmark: | Ph: (4520)23 88 97 |
| **TRO** France: | Ph((331 46) 489 850 |
| **TRO** Germany: | Ph: (4921) 665 8508 |
| **TRO** U.K.: | Ph: (44181) 520 5876 |
| **TRO** Italy: | Ph; (39 91) 611 3179 |
| **TRO** Malaysia: | Ph: 603 255 2472 |
| **TRO** Netherlanl | Ph: 31 72 644 442 |
| **TRO** New Zealand : | Ph: (649) 537 0258 |
| **TRO** Norway: | Ph: (47 22) 646 592 |
| **TRO** South Africa: | Ph: (27 471) 310 123 |
| **TRO** Sweden: | Ph: (4686) 870 649 |
| **TRO** Switzerland: | Ph: (41 41) 260 8398 |
| **TRO** U.S.A. | Ph: (0 1 301)729 2722 |
| **TRO** Australia: | Ph:Fax:(613) 9800 3899 |

# அன்பார்ந்த தமிழ் மக்களே எம்மக்களின் துயர் துடைக்க வாரி வழங்குக

## வாரி வழங்குங்கள்

இங்கு நாம்
உணவின்றி உடையின்றி உயிர் நீத்ததில்லை
பணமின்றிப் பெருவீதி தனில் வாழ்ந்ததில்லை

திடமான கூரை திரமான உணவு
துணியோடு மணியோடு தணியாத வாழ்வு

துளியொன்று நாமீந்து தலை போவதில்லை~அத்
துளியொன்று அவர்வாழ்வை வளமாக்குமன்றோ

துளியொன்று பலவாகி விரிவாகி நதியாகிப்
பெருவெள்ள மாயங்கு போய்ச்சேருமன்றோ!

பிறருக்காய் நாமிங்கு பணமீய வில்லை
உறவோடு உயிராக எம்மக்கள் என்றோ

ஒருதாயின் இருபிள்ளை இருவாழ்வு வாழும்
ஒருநாடு உலகத்தில் எம்நாடு அன்றோ

உயிருக்காய், உடையோடு உறையுள் தனுக்காக
விதியோடு போராடும் இழிவாழ்வு போதும்

இனியேதும் தாமதம் ஒருக்காலும் வேண்டாம்
புனர்வாழ்வுக் கழகத்தைப் பலமாக்கி நிற்போம்

புனர்வாழ்வுக் கழகத்தைப் பலமாக்கி நின்றால்
இனமான எம்மக்கள் வளமாக வாழ்வர்.

**இனமான உணர்வான**
**தமிழீழ மக்காள் !**
**கணமேனும் சுணக்காது**
**கனிவோடு தாரீர் !!**

-பாலரவி

### அன்பார்ந்த தமிழ் மக்களே!

சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு
**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்**
(பிரித்தானிய கிளை)
Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow,
London E17 4SA
**தொலைபேசி இல: 0181 - 520 5876**

ஜூரிச் மாநகரில்
ஜூலை 83 படுகொலை
நினைவு நாள் நிகழ்ச்சி

**Volkshaus**
Stauffacher Str. 60, Zurich

**26 . 07 . 97**
**சனிக்கிழமை**
**மாலை 6.00 மணி**

தமிழீழ விடுதலைப்புலிகள் (சுவிஸ் பணிமனை)

www.tamilarangam.net



# போரும் பொருண்மியமும்

## மக்களுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

அண்மைய இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் மரங்களுக்குக் கீழேயும், தெருவோரங்களிலும் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் கட்டாயத்திலிருந்து அவர்களைப் பாதுகாத்துத் தற்காலிக வதிவிடங்களை அமைத்துக் கொடுப்பதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது. இவ்வகையில் திட்டமிட்ட அடிப்படையில் புதிய மாதிரிக் கிராமங்களைப் பாதுகாப்பான பிரதேசங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அமைத்து வருகிறது.

அமைக்கப்படும் புதிய கிராமங்களில் குடியேறும் மக்கள் தமது சொந்தக் கால்களிலேயே நின்று தமக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளைத் தாமே உழைத்துப் பெறக்கூடிய வழிகளை அமைத்துக் கொடுக்கத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வருகிறது.

வன்னியில் அல்லலுறும் மக்களிற்கு

> வன்னிப் பிரதேசத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களிற்குத் தடை விதிக்கப் பட்டிருக்கிற போதிலும், எரித்திரியா, நைஜீரியா போன்ற நாடுகளில் நிகழ்ந் தவை போன்ற பட்டினிச் சாவு என்று எதுவும் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிட்ட பொருண்மிய உற்பத்தி நடவடிக்கைகளே என்று பிரபல பத்திரிகையாளர் சிவராம் கடந்த வாரம் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

நிவாரணங்கள் ஒழுங்காக வழங்கப் படுவதில்லை. மன்னார்ப்பகுதி மக்கள் நிவாரணப்பொருட்களைப் பெறுவதற்கு இராணுவமுகாமிற்கு வருமாறு கட்டாயப் படுத்தப் படுத்தப்படுகிறார்கள். பரந்து விரிந்த மன்னார் மாவட்டத்து மக்கள் ஒரு எல்லையிலிருந்து 20, 30 மைல்களைக் கடந்து இராணுவமுகாமிற்கு வாராந்தம் சென்று நிவாரணப் பொருட்களைப் பெற்றுவருவதற்கு எவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கும் என்பதை எம்மால் கற்பனை செய்து பார்க்கமுடியாது. ஏனெனில் போக்கு வரத்து வசதிகள் அற்ற நிலைமையில் இராணுவ கெடுபிடிகளைத் தாண்டி உயிரைக் கையில்பிடித்துக் கொண்டு சென்று திரும்புவது என்பது மறு உலகத்திற்குச் சென்று திரும்புவது போன்றதுதான்.

அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இப்பகுதிகளில் இயங்குவதற்கும் அரசாங்கம் பலவித தடைகளை விதித்து வருகிறது. இந்நிலையில் எமது மக்களைப் பட்டினியிலிருந்து பாதுகாக்க, அவர்களது அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்ய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அரும்பாடுபட்டு வருகிறது. அவர்களது வேலைத்திட்டத்தில் சிலவற்றை இங்கே பார்ப்போம்.

### விவசாயத் திட்டம்

புதிய கிராமங்களில் குடியமர்த்தப்படும் மக்களில் விவசாயம் செய்ய விரும்புபவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு இரண்டு ஏக்கர் நிலம் வீதம் கொடுக்கப்படுகிறது. அந்நிலத்தில் பயிர்செய்வதற்கு ஏற்ற விதைகள், உபகரணங்கள் என்பன வழங்கப்படுகின்றன. அவர்களிற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

ஆரம்பச் செலவுகளுக்காகத் தேவைக்கேற்ப வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுகிறது. நல்ல விளைச்சல் கிடைக்கும் பட்சத்தில் இக்கடன் இலகு முறையில் மீழப்பெறப்படும்.

### ஆடு, கோழி வளர்ப்புத் திட்டம்

புதிய இடத்தில், புதிய சூழலில், புதிய முறையில் வாழ முற்படும் எமது மக்களிற்கு பக்கத்துணையாக நின்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

தமது சொத்துக்கள் சொந்த பந்தங்கள் எல்லாவற்றையும் இழந்து வந்திருக்கும் எம்மக்களிற்கு உறுதுணையாக நின்று அவர்களிற்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்துப் பல வழிகளிலும் அவர்களிற்கு ஒத்தாசையாகவிருந்து செயற்பட்டு வருவதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முதன்மை வகிக்கிறது.

இங்கு குடியேறியிருக்கும் குடும்பங்கள் தமக்கு வேண்டிய பாலுணவைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக குடும்பத்திற்கு ஒரு ஆடு என்ற முறையில் கடன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. சிறுபிள்ளைகள் உள்ள குடும்பங்களிற்கு இவ்விடயத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

இங்கு கொடுக்கப்படும் ஆடுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்திலிருந்து உருவாக்கப்பட்ட சிறந்த இன ஆடுகளாகும்.

ஆடுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் அது ஈனும் முதலாவது குட்டியைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்குக் கொடுக்கவேண்டும். இக்குட்டி வேறோர் குடும்பத்திற்கு மீண்டும் கடன் அடிப்படையில் கொடுக்கப்படும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்தில் தமிழ் மக்களும் தமது ஆடுகளைக் கொண்டு சென்று வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட சிறந்த இனச் சினைகளினால் சினைப்படுத்தமுடியும்.

இது போன்று இம்மக்கள் சத்தான உணவுகளைப் பெற ஏதுவாக வீட்டுக் கோழி வளர்ப்பு ஊக்குவிக்கப்படுகிறது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து குடும்பத்திற்கு ஐந்து கோழிக்குஞ்சுகள் வீதம் கடன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. இக்கோழிக்குஞ்சுகள் வளர்ந்து மீண்டும் அவை குஞ்சுகள் பொரிக்கும்போது ஐந்து குஞ்சுகளைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்குத் திரும்பக் கொடுக்க வேண்டும்.

இது போன்று உணவு பதனிடல், அன்றாட பயன்பாட்டிற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி பண்ணக் கூடிய சிறு கைத்தொழில்கள், நன்னீர் மீன்வளர்ப்பு, எரிபொருள் மற்றும் சக்தித்தேவைகளிற்கு மாற்றீடுகளை அறிமுகப்படுத்தும் தொழில் நுட்பங்கள் போன்ற பல துறைகளிலும் தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற்பாடுகளை அடுத்து வரும் இதழ்களில் பார்ப்போம்.

> தமிழீழத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற் திட்டங்களிற்கு வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களினதும் மற்றும் நண்பர்களதும் உதவி, ஒத்தாசைகளை ஒன்று திரட்டி அங்கு பயனுள்ளதாக்கும் நோக்குடன் பல நாடுகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிளைகள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. தாயக மக்களின் துயர்துடைக்க ஆர்வமுடைய புலம்பெயர்ந்து வாழும் மக்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் உங்கள் பங்களிப்பு அங்கு பயன்பட நாம் உதவிசெய்வோம். உங்களது பங்களிப்பு நிதியுதவியாக இருக்கலாம், தொழில் நுட்ப ஆலோசனைகளாக இருக்கலாம், மற்றும் இங்கு எமது வேலைத்திட்டங்களைத் திறமையாகவும் துரிதமாகவும் நிறைவேற்றிட நேரடிப்பங்களிப் பாகவும் இருக்கலாம். எந்த வகையிலும் உங்கள் பங்களிப்பை அங்கு அல்லலுறும் எமது சகோதரர்களிற்குப் பயனுள்ள தாக்க எம்முடன் தொடர்பு கொள்க.
>
> தொலைபேசி: 0181 365 0249

---

# தளிர் மாலை
# 1997

**தமிழ்ச் சிறார்களுக்கிடையே போட்டிகள்**

பொது அறிவுப் போட்டி (General Knowledge)
பேச்சுப் போட்டி (Speech)
சித்திரப் போட்டி (Art)
மாதிரி அமைத்தல் (Model Making)
வினோத உடைப் போட்டி (Fancy Dress)
இவற்றுடன்
தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையேயான கலை நிகழ்ச்சிப்போட்டிகள்

06–09–.97 இல் உள்ளபடி போட்டிகளுக்கான வயதுப் பிரிவுகள்
Group A 5 வயதுக்கு உட்பட்டவர்கள்
Group B 5 – 7 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group C 7 – 9 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group D 9 – 12 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group E 12 – 15 வயதுக்கு இடைப்பட்டவர்கள்

**இடம்**

**Camden Town Hall**
**Bidborough Street**
**London WC1H 9JE**

**Nearest underground: Kingscross, Euston**

**காலம்**

**06 - 09 - 97**
**Saturday**
**5.00 pm - 10 pm**

விண்ணப்ப முடிவுத் திகதி 31-7-97

விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
**0181 365 0249**
**or**
**0171 403 4554**
**after 9.pm 0181 503 3503**

---

தமிழீழ மண்ணின் வளங்களை, நல்லமுறையில் எவ்வாறு பயன்படுத்தலாம்,பேணலாம் என்பது சம்பந்தமாகவும், எமது மண்ணின் பொருளாதார நல்வாழ்வை எவ்வாறு கட்டி எழுப்பலாம் என்பது சம்பந்தமாகவும் களத்தில் பத்திரிகையில் வெளியிடுவதற்கு கட்டுரைகள், ஆய்வுகள் வரவேற்கப்படுகின்றன.

**தொடர்புகட்கு: 0181 365 0249**

**TEEDOR - UK**
**202 Eelam House**
**London SE1 4QB**

www.tamilarangam.net



# சிறுகதை

# ஒளியைத் தேடி இருளில்

**- கோவலன் - (தமிழீழம்) -**

பூமியின் சுழற்சியால் சூரியன் மேற்குப் பக்கத்தால் விலகிச் சென்று கொண்டிருந்தான். இருட்டுவதற்கு இன்னும் அதிக நேரம் இருக்கவில்லை. காற்றைக் கிழித்தபடி காட்டுப் புறாக்கள் 'விர்' என்று பறந்து சென்றன. கூட்டுவாழ்வைத் தொலைத்துவிட்ட சமுதாயத்தின் ஒரு பகுதியான அந்தக் கிழவி குடிசையின் வாசலில் குந்தியிருந்து எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் காட்டுக் கிராமம் கைபடாமல் காடு மண்டிக் கிடந்தது.

வெட்டிய இளனிக் கோம்பைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்தன. மரத்துடன் சாய்ந்தவாறும் பின்னிய பச்சை ஓலைகளில் ஒருக்களித்துப் படுத்தவாறும் பல உருவங்கள் அசைவற்றுக் கிடந்தன. கூட்டம் பிரிந்த காட்டு வாத்தொன்று 'க்வாக்' என்று



கத்தியபடி எழுவான் திசையில் பறந்து சென்றது.

இப்போது நன்றாக இருட்டிவிட்டது. மழை வருவதற்கு அறிகுறியாக குளிர்காற்று இலேசாகத் தழுவிச் சென்றது. வானத்தில் சிறு ஒளிக் கற்றைகள் கூட தென்படவில்லை. படுத்திருந்த உருவங்களிடையே சிறு சலசலப்பு ஏற்பட்டது. ஆடைகளைக் கைகளால் தட்டிவிட்டபடி வரிசையாக எழுந்து நின்றார்கள்.

ஒளியில்லாத வாகனமொன்று மெதுவாக ஆடியசைந்தபடி அவ்விடத்தை நோக்கி சத்தமின்றி வந்து நின்றது. வாகனத்தில் இருந்து இறங்கிய உருவம் வரிசையாக நின்றவர்களிடம் ஏதோ கதைத்தது. திடீரென்று எங்கிருந்தோ பெரிய காற்றொன்று 'ஊ.....' என்ற பேரிரைச்சலுடன் அவ்விடத்தைக் கடந்து சென்றது. மரங்களில் இருந்த பழுத்த இலைகள் பொல பொலவென உதிர்ந்தன.

அங்கிருந்த அனைவரும் ஒருவர் பின் ஒருவராக நடக்கத் தொடங்கினர். பல நாட்களாக பயன்படுத்தப்படாததால் வீதியின் இரு பக்கமும் புற்கள் அடர்ந்து காணப்பட்டன. இரு காட்டுப் பன்றிகள் வீதியைக் கடந்து ஓடின. வரிசையின் முன்னே நடந்த உருவம் பாதை காட்டியபடி சென்றது.

மழை லேசாகத் தூறத் தொடங்கியது. ஆனால் வரிசையில் சென்ற யாரும் ஒதுங்குவதற்கு இடம் தேடவில்லை. நடந்து கொண்டிருந்த வரிசை திடீரென நின்றது. முன்னால் பாதை காட்டியபடி சென்ற உருவம் ஏதோ கைகளால் சைகை காட்டியது. பின்னால் நின்றவர்களுக்கு அருகில் வந்து ஏதோ காதுக்குள் குசுகுசுத்தது. மழை இப்போது சோவெனக் கொட்டத் தொடங்கியது. நின்ற உருவங்களின் ஆடைகள் தெப்பமாக நனைந்துவிட்டது. ஐயோ! மாற்றுவதற்கு ஆடைகள் இல்லையே! இரவு முழுவதும் என்ன செய்யப் போகிறார்கள்? ஆனால், அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

நீண்ட நிரையாக நடந்து வந்தவர்கள் சிறுசிறு பிரிவாகப் பிரிந்து ஒவ்வோர் பக்கமாகக் காட்டுக்குள் இறங்கினர். வயல் நிலமெங்கும் நீர் மண்டிக் கிடந்தது. பகலில் நடப்பது கூட அவ்விடங்களில் சிரமமாகத்தான் இருக்கும். வயல் வரம்புகளில் அமர்ந்திருந்த தவளைகள் தொப், தொப்பென நீருள் பாய்ந்தன.

முன்னால் ஏதோ மங்கலாகத் தெரிந்தது. இருட்டில் அதைப் பார்ப்பது கூட சிரமமாக இருந்தது. ஆ..... இப்போது தெளிவாகத் தெரிகிறது. கனகாலமாகக் கைவிடப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் அது. அரைவாசிப் பகுதி இடிந்த நிலையில் நிமிர்ந்து நின்றது.

வந்தவர்கள் தங்கள் சுமைகளை இறக்கி வைத்துவிட்டு உடைந்த தூண்களோடு சாய்ந்துகொண்டனர். வெளவால் எச்சம் மூக்கைத் துளைத்தது. ஏதோ கூடாத நாற்றம் வயிற்றைக் குமட்டியது.

நிலத்தில் என்ன ஏதென்று பார்க்க முடியாத இருட்டு. ஆனாலும், ஓரிருவர் விழித்திருக்க மற்றையோர் அந்தப் பிசுபிசுத்த நிலத்தில் படுத்துக் கொண்டனர்.

நேரம் நடுநிசியைத் தாண்டியிருக்க வேண்டும். ஒருவன் அவசரமாக எல்லோரையும் எழுப்பினான். எல்லோரும் தங்கள் உடமைகளைச் சரிபார்த்துக் கொண்டனர். இப்போது வானம் வெறிச்சோடிக் கிடந்தது. இனப்பெருக்கத்திற்காய்க் கத்தும் மாரித் தவளைகளின் ஒலி காதைப் பிளந்தது.

இப்போது மிகவும் அவதானமாக முன்னேறினார்கள். ஒவ்வொரு காலடிகளையும் சேற்று நிலத்தில் எடுத்து வைப்பது சிரமமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவர்கள் சிறிதும் தளர்வடையவில்லை.

திடீரென வெடியோசை காதைப் பிளந்தது. சன்னங்கள் அங்குமிங்குமாகப் பறந்தன. எறிகணைகள் மழைபோல் கொட்டப்பட்டன. ஆனாலும், சென்றவர்கள் நிலைகுலையவில்லை. இலக்கை நோக்கிப் புயலெனப் புகுந்தனர். எதிர்ப்பட்ட முள்வேலிகளையும் அகழிகளையும் காற்றாகக் கடந்து சென்றனர்.

தமிழ் மண்ணை ஆக்கிரமித்திருந்த பிசாசுகள் நிலைகுலைந்தோடின. பகைவர், காவலரண்களிடையே பிணங்களாயினர். எங்கும் கரிமருந்து நெடி மூக்கைத் துளைத்தது.

பூமி தன்னை ஒரு சுற்றுச் சுற்றி முடித்திருந்தது. காடுகளுக்கு மேலால் சூரியன் லேசாக எட்டிப் பார்த்தான். அதோ! என்ன அது? பகைவரின் காவலரணுக்கு முன்னால் ஏதோ ஒன்று கறுப்பாக.... சற்று நெருங்கிப் பார்த்தால் தெரியும்.

அன்னை மண்ணை மீட்பதற்காய் தன் இன்னுயிரைத் தியாகம் செய்தபடி குருதிச் சேற்றில் புதைந்து கிடந்தான் ஒரு புலிவீரன். ஆம். இம் மண்ணிற்காய் உரமாகிப் போன ஒரு உயிர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடனும், விழுப்புண்ணடைந்த வீரர்களைத் தூக்கிக் கொண்டும் வீரர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர்.

குடிசையிலிருந்து எட்டிப் பார்த்த அந்தக் கிழவி பொக்கை வாய் காட்டிச் சிரித்தாள். "ஆச்சி! கொஞ்சம் தண்ணி தாருங்கோ" வாசலில் நின்றிருந்த அந்த வீரன் கேட்டான். மகிழ்வால் பூரித்துப் போனாள் அந்தக் கிழவி. "தம்பியவை இதில இருங்கோ. பனங்கட்டியோடை தேத்தண்ணி தாறன்"

முற்றத்தில் கிடந்த காட்டுச் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு குடிசையில் நுழைந்தாள் அந்தத் தமிழ் மூதாட்டி.

வீரர்கள் சிரித்துக் கொண்டனர். அந்த மண் அவர்களை என்னிலையிலும் கைவிடாது தாங்கி நிற்கும் என்பதை எண்ணி மகிழ்ந்து கொண்டு சாணியால் மெழுகிய முன் திண்ணையில் அமர்ந்தனர். தாய் மண்ணின் இன்பம் அப்படியே அவர்களை அரவணைத்துக் கொண்டது. கண்கள் இமை சொருக, நித்திரை விழித்த அலுப்புத் தீர அப்படியே திண்ணையில் கண் அயர்ந்தனர். வயல் வெளியில் தவழ்ந்து வந்த காற்று அவர்களைத் தாலாட்டிச் சென்றது. ✷

கைப்பற்றப்பட்ட பொருட்களுடனும், விழுப்புண்ணடைந்த வீரர்களைத் தூக்கிக் கொண்டும் வீரர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர்.
குடிசையிலிருந்து எட்டிப் பார்த்த அந்தக் கிழவி பொக்கை வாய் காட்டிச் சிரித்தாள். "ஆச்சி! கொஞ்சம் தண்ணி தாருங்கோ"வாசலில் நின்றிருந்த அந்த வீரன் கேட்டான். மகிழ்வால் பூரித்துப் போனாள் அந்தக் கிழவி.

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை 15 - 08 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, LondonSE1 4QB.**



www.tamilarangam.net






### இது உறுதி

பொருளாதாரத்தடை எமையெது செய்யும்
பொங்குதமிழ் நிலம் காக்க சேய்தந்தோம் – சோரவில்லை
பொன்விளையும் பூமிஇது
புறப்பட்டோம் ஏர் முனையில் போர்தொடுக்க.
பொறுமை எனும் நகைபூண்ட தாய்க்குலந்தான்
பொங்கிவிட்டால் புதுமைபல செய்வோம்
தன்னிறைவு காணும்வரை ஓயமாட்டோம்
தரணிக்கே தலைவணங்காத் தமிழீழம் சமைப்போம்.

**- சண். ரவிச்சந்திரன் யேர்மனி.**

### களை பிடுங்கி கரை காண்போம்.

களை பிடுங்கிவிட்டோம்
வரம்பை எட்டிவிட்டோம்
களைப்பு நீங்கிவிட்டோம்
களை அகன்ற வயலைப் பார்
கண்களில் தெரியும் ஈழம்போல்
பசுமை தெரிகின்றதே
எதிரிகளை அழிக்க களம் காணும்
வேங்கைகளின் கருத்துப்போல்!

**- இ.சிறிஸ்கந்தராஜா யேர்மனி.**

### கையேந்தமாட்டோம் தீனிக்காக!

வான் குண்டுகள் வயலை அழித்தாலும் –
எதிரி
கால்பட்டு பயிர்கள் நசிந்தாலும்
வாய் வயிறு பசிவந்து காய்ந்தாலும்
நோயுற்று உயிர்பிரிந்து போனாலும்
சிங்களம் திமிருடன் தருகின்ற
தீனிக்கு கையேந்த மாட்டோம்
நிலவளமும் மனபலமும் உள்ளவரை!

**- செல்வி சுவீதா சிறிஸ்கந்தராஜா
யேர்மனி**



### நம்பிக்கை ஒளி

நெல் விதைத்த வயல்தனில்
நீசர்படை நடந்ததனால்
நெருஞ்சிமுள் படர்ந்ததென்று
நீங்கள், களைய வந்தீரோ?
பச்சிளம் பாலகர்கள் படைவெல்வர் என்று
நாளை, நாற்று நட்டுவைப்பீரோ?

**- திருமதி செல்லம்மா தம்பிப்பிள்ளை
டென்மார்க்.**

### இரவு விடியும்

பகைவனே வயிற்றுப் பசிக்கு மண்டியிடோமென
நெல் செழிக்க களைகின்றீரோ?
நம் தாயகத்தில் களையின்றி வாழ
வழியமைப்பது நம் சேவையென களைகின்றீரோ?
நாளைய விடியலில் எம் தாயகத் தலைவன் வரும்
பாதையில் களை இருக்கக்
கூடாதென களைகின்றீரோ?
நாளை நாமும் வருவோம் சேனைத் தலைவனின்
வழியில் சிங்க வாரிசுகளை களைந்தெறிய!

**- சி. ரதீஸ் யேர்மனி**

### நம்பிக்கை

கூயவன் கணவனின் உயிர்
குடித்தாலென்ன! நாங்கள்
அகதியென்றே ஊர்விட்டு ஊர்
அலைந்தாலென்ன! விரைவில்
களத்தில் பிள்ளைகள் எதிரியை
களைந்தெறிவரென்றோ அச்சமின்றி
வயல்வெளியில் வளைந்து
களையெடுக்கின்றீர்!

**- பருத்திநகர் நித்தி.**

### கருகாது

எங்கள் அறுவடை நிலத்தில் உன் அரக்கரை
ஏவிவிட்டாலும் அடங்காது எம் உணர்வு!
பொருள் தடையால் வந்தது பஞ்சமல்ல
உரிமைபறித்தே வஞ்சனை செய்தாய்
எங்கள் தாய்நிலத்தின் மடியில் நிறைவுண்டு
உனக்கோ அடுத்தவன் காலடியில்தான்
எம் உள்ளத்தில் உணர்வு இருக்கும்வரை
எம் விளைநிலம் கருகாது.

**- ஜோ. ஜோவின் இலண்டன்.**

### வாசகர் கடிதம்:

மதிப்புக்குரிய களத்தில் ஆசிரியர் குழுவிற்கு!

நான் பிரான்ஸ் நாட்டில் காலடி வைத்து சில வாரங்களேயாகின்றன. வந்ததிலிருந்து கிடைக்கப் பெற்ற களத்தில் பத்திரிகையை வாசித்து வருகின்றேன். நல்ல சுவையான அம்சங்களுடன் எம் மண்ணில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களைச் சுமந்து வரும் களத்திலை பல சிரமங்களை எதிர்கொண்டு திறம்பட நடத்துவதையிட்டு மகிழ்ச்சி. உடனுக்குடன் செய்திகளை திரட்டுவது கஸ்ரமான காரியமே, என்றாலும் அதிலும் வீறுநடை போடும் களத்திலில் எம் மண்ணுக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்யும் மாவீரர்கள் பெயர்களை வெளியிட்டாலும் குறைவாகவே உள்ளது. இயன்றளவு கூடிய முயற்சி செய்து அனைத்து மாவீரர்களின் பெயர்களையும் பிரசுரிக்கவும். காரணம், என்னைப்போல் பல போராளிகளின் சகோதரங்கள் வெளிநாட்டில் வாழ்வார்கள். அவர்களின் நிலை அறியாது தவிக்கும் மக்களுக்கும் நண்பர்களுக்கும் சிறந்த பக்கம் அதுவே.

உண்மை நிகழ்ச்சி:– களத்திலில் வெளியான மாவீரர் பட்டியலில் எனது நண்பியின் அண்ணனின் பெயரும் வெளிவந்தது. நண்பி யாழ்நகரில் இருப்பதால் எதையும் அறிய முடியாது தவித்தார். நான் பிரசுரிக்கப்பட்ட பெயரை எடுத்து மடல் மூலம் அறிவித்தேன். நன்றி கூறிப் பதில் வந்தது. நன்றிகள் அனைத்தும் உங்களுக்கே உரியது.

தங்கள் உண்மையுள்ள
**செல்வி செ. வனிதா - பிரான்ஸ்**

### ஆக்கங்கள் ஆனுப்பியோரின் விபரங்களை நன்றிகூர்தலுடன் பிரசுரிக்கின்றோம்:

யேர்மனி:– குமார் சுபாங்கி, சு. வசந்தி, ச. சிறீக்குமார், செல்வகுமாரன், பொ. விக்கி, கவிப்பிரியன், கோசல்யா சொர்ணலிங்கம், க.சிறீஸ்கந்தராசா, ம. தேவன்ரவி, எஸ். சுகுமாரன்.
சுவிஸ்:– குமார், அல்வாயூர் சோழன், அல்வையூர் சி. விஜயன், ந. சந்திரகுமார், த. மதி.
நெதர்லாந்து:– செல்வி மதிவதனா இராமகிருஷ்ணன்
பிரான்ஸ்:– சேனையூரான், சிறிமலர், தனம், சேகரன், அ. செந்தில்விநாயகன், வாகீசன், ஈழத்தீசன்

www.tamilarangam.net



# வெற்றி நிச்சயம் இவனுக்குத் தானென்று வீழ்ந்து கும்பிட்டு விடைபெற்றுச் செல்வீர்கள்!



உலகோர் புகழும் ஒப்பிலாத் தீவினை
இனப்போர் நிகழும் தெப்பமாய் மாற்றிப்
பலபேர் உயிரைப் பலியெடுத் திருக்கும்
பாழும் பௌத்தச் சிங்களப் படைகளே!

புத்தன் மேனியில் பைந்தமிழ் மக்களின்
ரத்தம் வார்த்து யுத்த வெறியுடன்
கத்தியும் பொல்லும் காணிக்கை செய்து
சுற்றிடும் பௌத்தப் பிக்குகள் சங்கமே!

காவி யுடைக்கும் கருவிஷம் தாங்கித்
தீவின் அரசினைத் தீண்டிடும் பிக்குகள்
பாவத் தூண்டலின் ஏவற் பேய்களாய்க்
கூவும் சிங்களத் தேசக் குடிகளே!

அழிவுத் தீயின் உச்சியில் நின்று
ஆர்ப்பரித் திடுகின்ற ஆட்சியின் அமைச்சரே!
விழிகள் மூடி வீழ்ச்சியை மறைத்துப்
போர்க்குரல் எழுப்பும் போலிக் குரல்களே!

நவாலித் திருச்சபை நாடிய மக்களை
நரபலி யெடுத்த நாளை நினைத்து
சுவாலைத் தீயிற் கருண்டு துடிக்கிறோம்!
சுதந்திர வேள்வியின் சுடருடன் நடக்கிறோம்!

அபாயம் கண்டு ஆலயம் ஒதுங்கிய
அப்பாவி மக்களை அழித்த அரக்கரே!
உபாயம் கூறி ஓரின அழிவை
உடன் நின்றியக்கும் உலக விஷங்களே!

விழிகள் மூடுமுன் விளையாடிக் களித்த
ஒளிகளை எண்ணி ஒப்பாரி வைக்கின்றோம்!
வழியும் கண்ணீரால் வரலாறு எழுதி
வையத்தின் ஏட்டில் கையொப்பமிடுகிறோம்!

இழப்பின் எல்லையில் எங்கள் தமிழினம்
இதயம் சிவக்க எழுவது காண்பீர்!
உழக்கிய கால்களை உறுமிய குரல்களை
உதைத்து எதிர்க்கத் துணிவது காண்பீர்!

கறுப்பு யூலைகள் கடந்த காலத்தின்
நெருப்பு ஓவியம்; நிலத்திலே மிதிக்கும் உம்
உறுப்புக்கு இனியும் உத்தரவாதம்
தரப்போவதில்லைத் தமிழர் பெரும்படை!

வெறுப்பின் எல்லைக்கு விரட்டினீர் எம்மை;
இறப்புக்கள் தந்தெம தீரத்தை யுறுஞ்சினீர்!
அறுப்புக்காலம் எங்கள் மண்ணிலே
ஆரம்பமானதை அறியாமற் குதிக்கிறீர்!

காலி மாத்தறை ஏழைச் சிங்கள
வாலிபர்களை படையிலே கட்டிக்
கூலிக்கு ஈழக் கோட்டைக்கு அனுப்பிக்
காலையும் கையையும் பொறுக்கி மீள்கிறீர்!

முல்லைச் சமரிலே மூண்ட தோல்வியை
இல்லையென்று உலகுக்குக் காட்டிப்
பல்லைக் கடித்துப் படுபொய் புரட்டுச்
சொல்லி மழுப்பியே சுலபமாய்த் தப்பினீர்!




கொழும்பு ஏடுகள் கொட்டை கொட்டையாய்
விடும்புழுகுகள் வியப்பினைக் கடந்தவை!
'எழும்பு ஓடு நில்' என்று தன் கட்டளை
இடும் அரசுக்கு ஏவல்கள் செய்பவை!

திடும் திடும் எனத் தகவல்கள் தந்துதம்
குடும் பியாட்டியே கூச்சல்கள் தருபவை!
கடும் பசியிலே கத்திடும் அரசுக்கு
உடும்புத் தோல்கட்டி உடுக்கும் அடிப்பவை!

'ஈழம் கிடைத்ததும் எதிர்த்து நமையெலாம்
ஆழக் கடலிலே அமிழ்த்துவான் தமிழன்!
வாழ நமக்கினி வதிவிடம் இல்லை!
வடிவாய்த் தெரியுது' என்பதோர் வாதம்!

நரகாசுரர்கள் விடுதலைப் புலிகள்
நாட்டையே அழிப்பார்; பயங்கரவாதம்!
'பிரபா கரனிங்கு பிறந்ததே சிங்களர்
சிரசைக் கொய்திட' இதுவும் ஓர்வாதம்!

வெற்றி நிச்சயம் என்ற கோஷத்தின்
வெடிப்பு வன்னியிற் தந்த விளைவினைச்
சற்றும் ஏற்றிடச் சம்மத மின்றியே
சறுக்கல் சாட்டுகள் வந்தது வானிலே!

"தமிழன் தேசத்தைத் தட்டிப் பறித்தபின்
தாங்கள் இலங்கையின் தனியின மாகலாம்
உமிழும் நீரையும் ஊத்தைச் சோற்றையும்
வாங்கியுண்டு வாழட்டும் தமிழன்!

மூச்சு விடாமல் முக்காடு போட்டு
நோய்ப்பீதி யோடு நொந்து நடக்கட்டும்
கூச்சல் போட்டால் குரல்வளை கடித்து
வாய்ச்சுவை தீர்த்து வணக்கத்தை முடிப்போம்!"

வீச்சாய்ப் புத்த விகாரைகள் தோறும்
தீட்டப் படுகின்ற பேச்சுக்கள் இவைதான்!
பாய்ச்சிய இனவெறிப் பௌத்தத்தை உள்வாங்கி
ஆட்டம் ஆடும் இராணுவப் பேய்கள்!

இவையே சிங்கள இனத்திற்கு முன்னால்
விரியும் அரசியல் விளக்கங்கள்; அறிவோம் !
கதிரைத் தீர்வுகள் கட்சிச் சார்வுகள்
சொரியும் கண்ணீரைச் சுமாராய்ப் புரிவோம்!

போரின் கொடுமை யார்க்குமே வேண்டாம்!
பொல்லாத இழப்பின் கூர்த்துயர் வேண்டாம்!
தீர்வினைக் கூறும் தெளிவுமக் கிருந்தால்
திறந்த நெஞ்சுடன் வெளிச்சத்தில் வாருங்கள்!

எங்கள் தலைவன் உண்மையைத் துதிப்பவன்!
செங்கதிர் போல உள்ளம் விரிந்தவன்!
பொங்கும் நேயத்தைப் புரிந்திட வல்லவன்!
வங்கத்து நாயகன் வஞ்சம் அறியான்!

உங்களில் யாரேனும் உண்மையை நம்பினால்
தம்பிமுன் வாருங்கள்;தலைவனைப் பாருங்கள்
பங்கம் வராது; பயப்படா தீர்கள்!
பயன் கொண்டு மீளலாம்; பாதை மாறினால்

வேங்கை வெளிப்படும்;வெற்றிச் சங்கூதும்!
தாங்க மாட்டீர்கள்; தமிழ்மானம் அறிவீர்கள்!
ஈங்கு வாழ்தமிழரின் இதயத்தைக் காண்பீர்கள்!
ஈகத்தை இலட்சியத்தை தேசியத்தை
உணர்வீர்கள்

வெற்றி நிச்சயம் இவனுக்குத் தானென்று
வீழ்ந்து கும்பிட்டு விடைபெற்றச் செல்வீர்கள்!
சத்திய மலையைச் சந்தித்த சுகத்தைச்
சந்திரிக் காவிடம் சொல்லி மகிழ்வீர்கள் !

- புலவர் சிவநாதன் -


www.tamilarangam.net












"யூலை" என்றால் குடல் நடுங்கும்
நெஞ்சம் வெதுவெதும்பிக் கண்ணீர வடிக்கும்
திட்டமிட்டுச் சிங்களத்தார் அள்ளிவைத்த கொள்ளியிலே
துடிதுடிக்கச் சரிந்த உறவுகளை நினைப்போம்
துன்பச் சிலுவை சுமந்த தோளிற்கு..
"யூலை" என்றதும் பாரம் கூடும்!
"இந்த யூலையில் என்ன நடக்குமோ...?"

காலச் சக்கரம் வீச்சாய் சுழன்றதில்
கதையே மாறி....
யூலை என்றதும் எமக்குள் ஒரு கிளர்ச்சி!
முறைவைத்துப் பொடியள் குடுப்பாங்கள் என்ற மகிழ்ச்சி!!
"இந்த யூலையில் எந்த முகாமோ..?"
"ஆமியோ...நேவியோ.... ஆகாயப்படைதானோ...?"
எமக்குள் ஒரு பட்டி மன்றமே நடக்கும்.

எதிரியின் முகாமில் கதையே வேறு!
அச்சமும்... பயமும்...
சாக்களையும்.... நித்திரை ஒண்ணாப்
பிணியும் வாட்ட....
"கறுப்பு யூலை" கழியுமட்டும்
ஒரே கலக்கம் !!

**- ஜெயா (பிரான்ஸ்) -**

83 யூலை
இன அழிப்பு ....

முல்லைத்தள வெற்றியின்
முதலாம் ஆண்டு நினைவாக...

நவாலி இனப்படுகொலை
இரண்டாம்
ஆண்டு .....







T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-0463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-348 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T. 03-470 6441 F: 560 8224